*Gates Industrial Corporation Ltd.*

# *தொழில்வணிக நடத்தை மற்றும் அறத்திற்கான நெறி*

ஜூன் 2022

அன்புள்ள சக ஊழியர்களுக்கு,

Gates Industrial Corporation Ltd. மிக உயர்ந்த அற மற்றும் சட்டத் தரநிலைகளைப் பராமரிப்பதில் பற்றுறுதி கொண்டுள்ளது. நாம் நமது தொழில்வணிகத்திற்கான உலகளாவிய பல சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை எழுத்தளவிலும் பொருள் அளவிலும் பின்பற்றுவதிலும், முறைதவறிச் செயல்படுவது போன்ற வெறும் தோற்றத்தைக்கூட ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத் தவிர்ப்பதிலும் நாம் பற்றுறுதி கொண்டிருக்கிறோம்.

நாணயம், பொறுப்பாதல் ஆகிய நமது மைய மதிப்பீடுகள், நமது அன்றாடத் தொழில்வணிக நடவடிக்கைகளில் நமக்கு வழிகாட்ட வேண்டும். நமது கடந்தகால முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பால், ஒரு முன்னணி உலகளாவிய நிறுவனமாக ஆகும் அதே சமயத்தில் நேர்மையான, அறவழியிலான நடத்தைக்கும் நமக்கு நற்பெயரை நிறுவியிருக்கிறோம். Gates-இன் ஊழியர் என்ற முறையில் நீங்கள் இந்தக் கோட்பாடுகளின்படி தொழில் நடத்துவீர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாம் நமது சக ஊழியர்களை நடத்தும் விதமும் Gates-இல் நமது கலாச்சாரத்திற்கு அத்தியாவசியமானது. பன்மைதான் ஓர் உலகளாவிய நிறுவனமாக நாம் அடைந்திருக்கும் வெற்றிக்கு உந்துசக்தியாகத் திகழ்கிறது. நம் அன்றாட நடத்தை, நமது வெவ்வேறு கலாச்சாரங்களுக்கும் பின்னணிகளுக்கும் முறையான மரியாதையைப் பிரதிபலிப்பது அத்தியாவசியமானது. மற்றவர்கள் நம்மை எப்படி நடத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அதே விதத்தில்தான் நாம் எப்போதும் ஒருவரையொருவர் நடத்தப் பாடுபட வேண்டும்.

நமது நடத்தை நெறியைப் பின்பற்றுவதில் உங்களுக்கு உள்ள பற்றுறுதி, நம் நிறுவனத்தையும் உங்கள் ஒவ்வொருவரையும் வலுப்படுத்துகிறது. உங்கள் அர்ப்பணிப்புக்கு நன்றி.

Ivo Jurek
தலைமை செயல் அலுவலர் (Chief Executive Officer)
Gates Industrial Corporation Ltd.

பொருளடக்கம்


1. **தொழில்வணிக நடத்தை மற்றும் அறத்தின் கோட்பாடுகள்** ........ 1
2. **சட்டங்களைப் பின்பற்றுதல்** ........ 2
   - 2.1 **பொதுவாக** ........ 2
   - 2.2 **அரசு அதிகாரிகளையும் அரசு முகமைகளையும் கையாளுதல் – ஊழல் எதிர்ப்பு மற்றும் சர்வதேச வர்த்தக ஒழுங்குமுறைகள் (**Anti-Corruption and International Trade Regulations) ........ 3
   - 2.3 **உள்வர்த்தகம்** ........ 4
   - 2.4 **வரி தெரிவிப்பு** ........ 6
   - 2.5 **கடன்கள்** ........ 6
3. **நலன் முரண்பாடுகள்** ........ 6
   - 3.1 **பொதுவாக** ........ 6
   - 3.2 **நிறுவனத்திற்கு வெளியிலான நடவடிக்கைகள்** ........ 8
4. **நிறுவன தொழில்வணிக வாய்ப்புகள்** ........ 9
5. **ரகசியக்காப்பு** ........ 10
   - 5.1 **ரகசியக்காப்புள்ள தகவல்கள்** ........ 10
   - 5.2 **தனிப்பட்ட** தகவல்கள் ........ 12
6. **தரம்** ........ 13
7. **நியாயமாகக் கையாளுதல்** ........ 13
   - 7.1 **நியாயமாகப் போட்டியிடுதலும் ஏகபோக எதிர்ப்பு மற்றும் நியாயமான போட்டியிடல் சட்டங்களும் (**Antitrust and Fair Competition Laws) ........ 13
   - 7.2 **ஊழியர் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு** ........ 15
   - 7.3 **சமமாக நடத்துதல்** ........ 16
   - 7.4 **பன்மையும் அரவணைப்பும்** ........ 17
   - 7.5 **சுற்றுச்சூழல்** ........ 17
   - 7.6 **சப்ளையர் மற்றும் வாடிக்கையாளர் உறவுகள்** ........ 18
   - 7.7 **மனித உரிமைகள்** ........ 20
8. **நிறுவன சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல்** ........ 20
   - 8.1 **நிறுவன சொத்துக்களைப் பயன்படுத்துதல்** ........ 20
   - 8.2 அரசியல் மற்றும் தொண்டு நடவடிக்கைகள் ........ 21
   - 8.3 **நிதி ரீதியான கட்டுப்பாடுகள்** ........ 22
   - 8.4 **அறிவுசார் சொத்து** ........ 23
9. **அரசுப் புலனாய்வுகளும் தகவல் வேண்டுகோள்களும்** ........ 24
10. **பின்பற்றலும் தெரிவித்தலும்** ........ 25
    - 10.1 **பின்பற்றல்** ........ 25
    - 10.2 **தெரிவிப்புச் செயல்முறைகளும் பிற விசாரணைகளும்** ........ 25
11. **ஒப்புதல்கள் மற்றும் தள்ளுபடிகள்**; **திருத்தம்**; பொருள்விளக்கம் ........ 28

## 1. தொழில்வணிக நடத்தை மற்றும் அறத்தின் கோட்பாடுகள்

நமது தொழில்வணிகமானது நேர்மை, நாணயம், பொறுப்பாதல் ஆகியவற்றோடும் நாம் இயங்கும் நாடுகளில் இருக்கும் பொருந்தும் சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் ("சட்டங்கள்") ஆகியவற்றைப் பின்பற்றியும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த Gates Industrial Corporation Ltd. மற்றும் அதன் துணைநிறுவனங்கள் ("Gates" அல்லது "நிறுவனம்") கடைப்பிடிக்க வேண்டிய அறவழியிலான நடத்தையின் நீடித்துநிற்கும் கோட்பாடுகளை இந்தத் தொழில்வணிக நடத்தை மற்றும் அறத்திற்கான நெறி ("நெறி") விவரிக்கிறது. இந்த நெறியானது ஒவ்வொரு நிறுவன இயக்குநருக்கும் அலுவலருக்கும் ஊழியருக்கும் பொருந்தும். நிறுவன ஊழியர்கள் எல்லோரும் நெறியையும் எல்லா பொருந்தும் நிறுவனக் கொள்கைகளையும் அறிந்திருந்து கடைப்பிடிக்க வேண்டும். இந்த நெறியின் நோக்கங்களுக்காக, "இயக்குநர்கள்", "அலுவலர்கள்" ஆகியோரைக் குறிப்பிடும் சொற்கள் அனைத்தும் Gates Industrial Corporation Ltd.-இன் இயக்குநர் குழுவையும் (Board of Directors) ("போர்டு") அலுவலர்களையும் குறிக்கின்றன; "ஊழியர்" களைக் குறிப்பிடும் சொற்கள் அனைத்தும் நிறுவனத்தின் ஊழியர்களைக் குறிக்கின்றன. நமது கடந்தகால முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பால், ஒரு முன்னணி உலகளாவிய நிறுவனமாகவும் அதே சமயத்தில் நேர்மையான, அறவழியிலான நடத்தைக்கும் நமக்கு நற்பெயரை நிறுவியிருக்கிறோம். இந்த நற்பெயரால் நாம் பெருமை கொள்ள வேண்டும், இதைப் பேணிக் காக்க நாம் ஒன்றாகச் செயல்பட வேண்டும். இந்த நெறியானது இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் பின்வருபவை தொடர்பான தங்கள் சட்டபூர்வ மற்றும் அறம் சார்ந்த கடப்பாடுகளைப் புரிந்துகொள்ள உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது:

- சட்டங்களைப் பின்பற்றுதல்;
- நலன் முரண்பாடுகள்;
- கூட்டாண்மை வாய்ப்புகள்;
- ரகசியக்காப்பு;
- நியாயமாகக் கையாளுதல்;
- நிறுவன சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல்;
- சட்டவிரோதமான அல்லது அறமற்ற நடத்தையைத் தெரிவித்தல்.

இந்த நெறி முழுமையானதல்ல. பல சூழல்களில், இன்னும் குறிப்பான தேவைப்பாடுகள் பல்வேறு நிறுவனக் கொள்கைகள், செயல்முறைகள், வழிகாட்டுநெறிகள் ஆகியவற்றில் அடங்கியுள்ளன. ஒழுங்குமுறை FD-ஐப் பின்பற்றுவதற்கான நிறுவனத்தின் கொள்கை மற்றும் செயல்முறைகள்

(Company's Policy and Procedures for Compliance with Regulation FD), பங்கு கடன்பத்திர வர்த்தகக் கொள்கை (Securities Trading Policy), அம்பலப்படுத்துநர் கொள்கை (Whistleblower Policy) ஆகியவை இவற்றில் சில. இந்தக் கொள்கைகள், தொழில்வணிக நடத்தை குறித்தவை; இவை இந்த நெறிக்குக் கூடுதலாக இயங்குபவை. நிறுவனம் பல்வேறு நெறிமுறைகள் மற்றும் இணக்கத் தலைப்புகளின் மீதான கார்ப்பரேட் அளவிலான கட்டாயமான நேரடி மற்றும் ஆன்லைன் பயிற்சியைச் செயல்படுத்துகிறது. நிறுவனம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொண்டுள்ளதை உறுதிசெய்து கொள்வதற்காக, எந்தவொரு தேவையான பயிற்சியையும் கொள்கைச் சான்றிதழையும் நீங்கள் நிறைவு செய்ய வேண்டியது முக்கியம். இயக்குநர்கள் அவர்களது நடத்தை குறித்த கூடுதல் கொள்கைகளுக்குக் கூட்டாண்மை ஆளுகை வழிகாட்டுநெறிகளையும் (Corporate Governance Guidelines) பார்க்க வேண்டும். நிறுவனத்தின் ஊழியரல்லாத இயக்குநர்களைப் பொறுத்த வரை, இந்த நெறியைப் பின்பற்றுதல், நிறுவனத்தின் கழக அமைப்பு விதிகள் மற்றும் நிறுவனத்துடனான எந்தப் பங்குதாரர் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கும் உட்பட்டது. நீங்கள் இந்தக் கொள்கைகள், செயல்முறைகள், வழிகாட்டுநெறிகள் ஆகியவற்றை உங்கள் மேலாளரிடமிருந்தும், Gates அக பிணையத்தின் உலகளாவிய கொள்கைகள் பக்கத்திலிருந்தும் செயல்பாட்டுத் துறை வலைத்தளங்களிலிருந்தும் பெறலாம். எப்போதாவது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை எப்படிக் கையாள்வது அல்லது அதற்கு எப்படி பதில்வினையாற்றுவது என உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றால் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கவும் இந்த வளங்கள் இருக்கின்றன. இந்த நெறியின் பகுதி 10.2-இல் ("அற மற்றும் பின்பற்றல் உதவி எண்" (Ethics and Compliance Hotline)) எடுத்துரைக்கப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி நிறுவனத்தின் அற மற்றும் பின்பற்றல் உதவி எண்ணின் மூலம் நீங்கள் மேலதிகக் கேள்விகளை அல்லது கவலைகளை அநாமதேயமாகத் தெரிவிக்கலாம். இந்த நெறியைப் பொருள் அளவிலும் எழுத்தளவிலும் மீறும் எந்த இயக்குநரும் அலுவலரும் அல்லது ஊழியரும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

## 2. சட்டங்களைப் பின்பற்றுதல்

### 2.1 பொதுவாக

Gates அதன் தொழில்வணிகத்திற்குப் பொருந்தும் சட்டங்களின் சட்டகத்திற்குள் இயங்குவதில் பற்றுறுதி கொண்டுள்ளது. எல்லா இயக்குநர்களும் அலுவலர்களும் ஊழியர்களும் பொருந்தும் சட்டங்களைப் புரிந்துகொண்டு பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டத்தைப் பின்பற்றுவது மட்டுமே நமது ஒட்டுமொத்த அறப் பொறுப்பு அல்ல, ஆனால் அது நிறுவனத்தின் வெற்றிக்கு அத்தியாவசியமான குறைந்தபட்ச நிபந்தனை. தொழில்வணிக அல்லது சந்தை நிலைகள் ஒருபோதும் சட்டத்தை மீறுவதற்கான காரணங்கள் ஆகாது. மீறல்கள் Gates மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களைக் குற்றவியல் கடப்பாடு, ஒழுங்குமுறை நடவடிக்கை, குடிமை சட்ட வழக்குகள் ஆகியவற்றுக்கு உட்படுத்தக்கூடும். கூடுதலாக, நிறுவனம் குறிப்பிட்ட சில அரசுக் குத்தகைகளைப் பெறுவதற்குத் தகுதிநீக்கம் செய்யப்படலாம்.

ஒரு நெறி அல்லது நிறுவனக் கொள்கை மீறல் உட்பட ஓர் அறம் சார்ந்த அல்லது சட்ட மீறல் ஏற்பட்டிருக்கும் வாய்ப்பைப் பற்றி உங்களுக்குத் தெரியவந்தால், அதைக் கீழே பகுதி 10.2-இல் எடுத்துரைக்கப்பட்டுள்ள செயல்முறைகளின்படி உடனடியாகத் தெரிவிக்கும் கடமை உங்களுக்கு இருக்கிறது.

## 2.2 அரசு அதிகாரிகளையும் அரசு முகமைகளையும் கையாளுதல் – ஊழல் எதிர்ப்பு மற்றும் சர்வதேச வர்த்தக ஒழுங்குமுறைகள் (Anti-Corruption and International Trade Regulations)

நாம் நமது தொழிலை நடத்தும்போது சர்வதேச, கூட்டமைப்பு சார்ந்த, மாநில மற்றும் உள்ளூர் அரசுகளுடன் வாடிக்கையாகப் பரிவர்த்தனைகள் நடத்துகிறோம். ஓர் அரசு அல்லது அரசாங்க முகமையுடன் நிகழும் எந்தப் பரிவர்த்தனைகளிலும், நீங்கள் மிக உயர்ந்த தரநிலைகளிலான நேர்மையையும் நாணயத்தையும் பின்பற்ற வேண்டும், பொருந்தும் எல்லாச் சட்டங்களையும் கடைப்பிடிக்க வேண்டும். இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் அரசுகளை “நெருங்காமல்” கையாள வேண்டும்; அவர்கள் பணம், அன்பளிப்பு, லஞ்சம், ரகசிய கமிஷன் அல்லது எந்த அரசு ஊழியர், அலுவலர், விண்ணப்பதாரர் அல்லது அரசியல் கட்சியின் முடிவையும் அல்லது செயலையும் பாதிக்கும் நோக்கத்துடன் அளிக்கப்படும் எந்த நன்மையும் உட்பட மதிப்புள்ள எதையும் அளிக்க முன்வரவோ பெறவோ கூடாது. ஊழல் எதிர்ப்புச் சட்டங்களின் கீழ், “அரசு”, “அரசு அதிகாரி” ஆகியவற்றின் வரையறைகள் விரிவானவை, பல சமயங்களில் எதிர்பார்க்கப்படுவதைவிடப் பரந்துபட்டவை.

அரசு அல்லது அரசு அதிகாரிகள், வாடிக்கையாளர்கள் அல்லது சப்ளையர்களுக்கு லஞ்சங்கள் அல்லது கையூட்டுகள் அளிப்பதற்கு அல்லது அவர்களிடமிருந்து அவற்றைப் பெறுவதற்குச் சிறிதும் அனுமதி இல்லை. அரசு அதிகாரிகளிடம் அளிக்கப்படும் கூற்றுகள், சமர்ப்பிக்கப்படும் பதிவுகள், அளிக்கப்படும் தகவல்கள் ஆகியவை, அவை வாய்மொழியாக இருந்தாலும்

எழுத்துமூலமாக இருந்தாலும், உண்மையாகவும் துல்லியமாகவும் இருக்க வேண்டும். எல்லா ஏலமுயற்சிகளும் நல்ல நம்பிக்கையுடன் செய்யப்பட வேண்டும். கூடுதலாக, முன்னாள் அரசு ஊழியர்களையும் தருவிப்பு அதிகாரிகளையும் பணியில் சேர்ப்பது தொடர்பாகக் குறிப்பான சட்டங்கள் இருக்கின்றன. வேலையில் சேர்த்தல் பற்றி அரசு ஊழியர்கள் அல்லது தருவிப்பு அதிகாரிகளுடன் நடத்தப்படும் எந்தக் கலந்துரையாடல்களுக்கும் Gates சட்டத் துறை முன்கூட்டி ஒப்புதல் அளிக்க வேண்டும். நமது ஊழல் எதிர்ப்புக் கொள்கையும் ("Anti-Corruption Policy") அன்பளிப்புக் கொள்கையும் ("Gift Policy") நிறுவனத்தின் பொருந்தும் கொள்கைகளையும் செயல்முறைகளையும் எடுத்துரைக்கின்றன. இவற்றை எல்லா இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோரும் பின்பற்ற வேண்டும். ஊழல் எதிர்ப்புக் கொள்கை மற்றும் அன்பளிப்புக் கொள்கையின் நகல்கள் உலகளாவிய கொள்கைகள் பக்கத்தில் உள்ளன.

இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் எப்போதுமே பொருந்தும் தருவிப்பு, ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் சர்வதேச வர்த்தகச் சட்டங்களை (புறக்கணிப்பு எதிர்ப்புச் சட்டங்கள் உட்பட) பின்பற்ற வேண்டும். தொடர்பான கொள்கைகளின் நகல்கள் உலகளாவிய கொள்கைகள் பக்கத்தில் உள்ளன.

## 2.3 உள்வர்த்தகம்

நீங்கள் ஒருபோதும் "உள்வர்த்தக"த்தில் ஈடுபடக் கூடாது. முக்கியத் தகவல்கள் பொதுவில் வெளியிடப்படுவதற்கு முன்பு, வெளியிடப்படும் அதே நேரத்தில் அல்லது வெளியிடப்பட்ட சிறிது நேரத்தில் பங்குகள், பங்குரிமை அல்லது பிற கடன்பத்திரங்களை வாங்குவதன் மூலம் அல்லது விற்பதன் மூலம் "முக்கியமான பொதுவல்லாத தகவல்" களின் அடிப்படையில் அல்லது "சந்தையை முறியடிக்க" முயன்று பங்குகள், பங்குரிமை அல்லது பிற கடன்பத்திரங்களை வாங்குவது அல்லது விற்பது (நிறுவனத் திட்டங்களின் மூலம் வாங்கப்பட்ட பங்குகளை அல்லது பங்கை விற்பது உட்பட) உள்வர்த்தகம் எனப்படுகிறது. முக்கியமான பொதுவல்லாத தகவல்களை வைத்திருக்கும்போது பங்குகள், பங்குரிமை அல்லது கடன்பத்திரங்களை வாங்குவது அல்லது விற்பது ஒரு குற்றம் என்பது மட்டுமின்றி, இன்னொருவரை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு ஊக்குவிப்பதும் அல்லது முக்கியமான பொதுவல்லாத தகவல்களை இன்னொருவருக்குத் தருவதும் ("தகவல் கொடுப்பது") பொதுவாகக் கடன்பத்திரச் சட்டங்களின் கீழ் குற்றங்களாகும். இந்தக் கட்டுப்பாடுகள் Gates-இன் பங்குகள், பங்குரிமை அல்லது

கடன்பத்திரங்களுக்கு மட்டுமின்றி நீங்கள் நிறுவனத்தில் வேலை பார்ப்பதன் விளைவாக அல்லது நிறுவனத்துடன் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டதன் விளைவாக நீங்கள் எந்த நிறுவனத்தைப் பற்றிக் குறிப்பான, முக்கியமான பொதுவற்ற தகவல்களைப் பெற்றீர்களோ அந்த நிறுவனத்தின் பங்குகள், பங்குரிமை அல்லது கடன்பத்திரங்களுக்கும் பொருந்தும்.

"முக்கியமான பொதுவற்ற தகவல்கள்" என்பவற்றில், பங்குகள், பங்குரிமை அல்லது பிற கடன்பத்திரங்களை வாங்குவதா விற்பதா என்பது பற்றி ஒரு முதலீட்டாளருக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய, இன்னும் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யப்படாத, அல்லது இத்தகைய தகவல்கள் பொதுவில் கிடைக்கச் செய்யப்பட்டால் தொடர்புள்ள பங்குகள், பங்குரிமை அல்லது கடன்பத்திரங்களின் விலை மீது கணிசமான விளைவை ஏற்படுத்தக்கூடிய எந்தத் தகவல்களும் அடங்கும்.

முக்கியத் தகவல்களுக்கான எடுத்துக்காட்டுகளில் பின்வருவனவும் அடங்கும்:

- காலாண்டு அல்லது வருடாந்தர முடிவுகள்;
- ஈட்டல் மதிப்பீடுகள் குறித்த வழிகாட்டல், இத்தகைய வழிகாட்டலை ஒரு பிந்தைய தேதியில் மாற்றுதல் அல்லது உறுதிப்படுத்துதல் அல்லது எதிர்கால நிதிச் செயல்பாடு குறித்த பிற கணிப்புகள்;
- இணைவுகள், வாங்குதல்கள், டெண்டர் அளிப்புறுதிகள், கூட்டு முயற்சிகள், அல்லது சொத்துக்களில் மாற்றங்கள்;
- தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பாகக் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்.

உள்வர்த்தகம் பெருமாபாலான நாடுகளில் அறமற்றது, கிரிமினல் குற்றமும்கூட. எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில், கிரிமினல் தண்டனையாக $50 லட்சம் வரையிலான அபராதம், இருபது ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை, ஈட்டப்பட்ட சட்டவிரோத லாபத்தைவிட அல்லது சட்டவிரோத வர்த்தகத்தில் தவிர்க்கப்பட்ட நஷ்டத்தைவிட மூன்று மடங்கு வரை குடிமைத் தண்டனைகள் ஆகியவையும் தண்டனைகளில் அடங்கலாம். பிரிட்டனில், இந்தக் குற்றத்திற்கு 7 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் வரம்பற்ற அபராதங்களும் விதிக்கப்படலாம்.

மேற்கூறப்பட்ட இந்த நெறிக்கு கூடுதல் இணைப்பாக ஒரு கடன்பத்திரங்கள் வர்த்தக் கொள்கையை (Securities Trading Policy) மேற்கொண்டுள்ளது; இது இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள்

ஆகியோருக்குப் பொருந்தும். நீங்கள் இந்தக் கொள்கையை அதன் முழு வடிவத்தில் படிக்க வேண்டும், கூடுதல் வழிகாட்டலுக்கு அதை அவ்வப்போது பார்க்க வேண்டும்.

### 2.4 வரி தெரிவிப்பு

ரொக்கத்தில் பணம் செலுத்தப்படும் பரிவர்த்தனைகள் உட்பட Gates எல்லா பரிவர்த்தனைகளையும் வரி நோக்கங்களின்படி பதிவுசெய்து தெரிவிக்கும். இயக்குநர், அலுவலர் அல்லது ஊழியர் என்ற முறையில் உங்களுக்கு உரித்தான எல்லா வரிப் படிகளும் வரி நோக்கங்களுக்காகப் பட்டியலிடப்பட்டுப் பிரகடனம் செய்யப்படும்.

எந்த இயக்குநரும் அலுவலரும் ஊழியரும் அதன் சார்பாகப் பணிபுரியும் எந்த வெளித் தரப்பும் வரி ஏய்ப்புக்கு ஏற்பாடு செய்வதில் அல்லது வழிவகுப்பதில் ஈடுபடுவதை Gates அனுமதிப்பதில்லை.

### 2.5 கடன்கள்

பொருந்தும் சட்டங்களின்படி, நிறுவனம் நேரடியாகவோ மறைமுகமாகவோ, எந்தத் துணைநிறுவனத்தின் மூலமாகவும் செயல்படுவது உட்பட, Gates Industrial Corporation Ltd.-இன் எந்த இயக்குநருக்கும் அல்லது நிர்வாக அலுவலருக்கும் (அல்லது நிகரான பதவியில் உள்ளவருக்கு) அல்லது அவர்களுக்காக சொந்தக் கடன் வடிவத்தில் கடன் அளிக்காது அல்லது பேணாது, கடனை நீட்டிக்க ஏற்பாடு செய்யாது, அல்லது ஒரு நீட்டிக்கப்பட்ட கடனைப் புதுப்பிக்காது. அத்துடன், எல்லா இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கும் அளிக்கப்படும் கடன்கள் அல்லது கடப்பாட்டு உத்தரவாதங்கள் நலன் முரண்பாடுகளை உருவாக்குகின்றன; இவை குறிப்பாகக் கவலைக்குரியவை.

## 3. நலன் முரண்பாடுகள்

### 3.1 பொதுவாக

உங்கள் சொந்த, சமூக அல்லது நிதி ரீதியான நலன்கள் நிறுவனத்தின் சிறந்த நலனுக்கேற்பச் செயல்படும் உங்கள் திறனில் எந்த விதத்திலும் குறுக்கிடும்போது (அல்லது குறுக்கிடுவது போன்ற தோற்றத்தை அளிக்கும்போதுகூட) ஒரு நலன் முரண்பாடு எழுகிறது. எல்லா ஊழியர்களும் Gates-இடம் தங்களுக்கு உள்ள பொறுப்புகளை நிறுவனத்தின் சிறந்த நலன் எது என்பதன் அடிப்படையில், தனிப்பட்ட ஆதாயத்தை அல்லது உறவுகளைச் சார்ந்திராமல் நிறைவேற்ற வேண்டும். இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள்

ஆகியோருக்கு நமது வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் அல்லது போட்டிநிறுவனங்களிடம் நிதி ரீதியான நலன் இருக்கக் கூடாது. நீதி ரீதியான நலன் வகைகளில் மிகப் பொதுவானவை, பங்குகள், பங்குரிமை, பத்திரங்கள் அல்லது நோட்டுகளைச் சொந்தமாக வைத்திருத்தல், தொழிற்கூட்டு நலன் அல்லது ஓர் அறக்கட்டளை அல்லது பிற உறவின் மூலம் ஒரு நேரடி அல்லது மறைமுக நலனைக் கொண்டிருத்தல். ஒரு நிதி ரீதியான நலன், Gates-இல் உங்களுக்கு உள்ள பொறுப்புகளில் நலன் முரண்பாடு எழும் சாத்தியத்தை அல்லது நலன் முரண்பாடு எழும் சாத்தியம் இருப்பதற்கான தோற்றத்தை உருவாக்கும் என்பதால் அது ஒரு பிரச்சினையாக இருக்கலாம். பொதுவாக, நியூயார்க் மற்றும் லண்டன் பங்குச் சந்தைகளில் வர்த்தகம் செய்பவை போன்ற பரந்த உரிமைத்துவம் உள்ள பொது நிறுவனங்களில் பங்குகள் அல்லது பங்குரிமை வைத்திருப்பதால் நலன் முரண்பாடுகள் எழாது - அத்தகைய நிறுவனத்தில் நீங்கள் முடிவுகளை மேற்கொள்ளாத அல்லது கட்டுப்படுத்தாத பட்சத்தில். நிறுவனத்தின் இயக்குநர்கள் என்ற முறையில் தங்கள் பொறுப்பாண்மை சார்ந்த கடமைகளை இயக்குநர்கள் நிறைவேற்ற வேண்டும்.

இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர், ஒரு நலன் முரண்பாடு இருப்பதாக நிறுவனம் நம்புகிறதா இல்லையா என்பது பற்றி ஒரு தீர்மானத்தைப் பெற, ஏற்பட வாய்ப்புள்ள எந்த முரண்பாடுகளையும் Gates சட்டத் துறையிடம் வெளிப்படுத்த வேண்டும். இத்தகையதொரு நபர் ஒரு நிறுவனப் பரிவர்த்தனையில் செல்வாக்கு செலுத்தும் இடத்தில் இருக்கிறார் என்றால், அந்தப் பரிவர்த்தனையின் விளைவாக அந்த நபருக்கு, அல்லது அந்த நபரின் வாழ்க்கைத் துணைக்கு அல்லது உறவாளருக்கு, உடன்பிறந்தவருக்கு, பெற்றோருக்கு, வாழ்க்கைத் துணையின் உறவினருக்கு, குழந்தைக்கு, அந்த நபரின் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு, அல்லது நெருங்கிய நண்பருக்கு (இத்தகைய எந்த நபருக்கும், அதாவது ஒரு “தொடர்புள்ள தரப்பு”க்கு) தனிப்பட்ட ஆதாயம் கிடைக்கக்கூடும் என்றால், இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் அந்தப் பரிவர்த்தனையை வெளிப்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனப் பரிவர்த்தனை பின்வரும் சூழ்நிலைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும்:

(i) இத்தகைய இயக்குநர், அலுவலர் அல்லது ஊழியர் அந்தப் பரிவர்த்தனையால் நிதி ரீதியாகவோ வேறு விதமாகவோ நன்மையடைவார் என்றால்;

(ii) பரிவர்த்தனையில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்பானது ஒரு தொடர்புள்ள தரப்பாக இருந்தால்; அல்லது

(iii) இத்தகைய இயக்குநருக்கு, அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு, அல்லது ஒரு தொடர்புள்ள தரப்புக்கு, அந்தப் பரிவர்த்தனையின் எதிர்த்தரப்பில் ஒரு நிதி ரீதியான உரிமைத்துவ நலன் இருந்தால்.

இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் பின்வரும் சூழ்நிலைகளிலும் முரண்பாடுகளை வெளிப்படுத்த வேண்டும்:

(i) இத்தகைய இயக்குநர், அலுவலர் அல்லது ஊழியர் ஒரு தொடர்புள்ள தரப்பு சம்பந்தப்பட்ட ஒரு வேலையளிப்பு முடிவை மேற்கொள்ளும் அல்லது அந்த முடிவில் செல்வாக்கு செலுத்தும் இடத்தில் இருந்தால்;

(ii) இத்தகைய இயக்குநர், அலுவலர் அல்லது ஊழியர் மேலாண்மை செய்யும் அல்லது மேற்பார்வையிடும் தொழில்வணிகக் குழுமத்தில் உள்ள ஒரு பதவிக்கு ஒரு தொடர்புள்ள தரப்பால் பரிசீலிக்கப்படுகிறார் என்றால்; அல்லது

(iii) இத்தகைய இயக்குநர், அலுவலர் அல்லது ஊழியர் தமது நிலைக்குக் கீழ் பணிபுரியும் ஒருவருடன் காதல் உறவை வளர்த்துக்கொள்கிறார் என்றால்.

நலன் முரண்பாடுகள் ஏற்படும் வாய்ப்பை வெளிப்படுத்தவும் நீக்கவும் பயன்படுத்தப்பட வேண்டிய நிகழ்முறை மற்றும் படிவத்தைப் பற்றிக் கூடுதல் விவரங்களுக்கு உலகளாவிய கொள்கைகள் பக்கத்தில் இருக்கும் நலன் முரண்பாடு வெளிப்பாட்டுச் செயல்முறைகளைப் பாருங்கள்.

### 3.2 நிறுவனத்திற்கு வெளியிலான நடவடிக்கைகள்

ஊழியர்கள் பணிசாரா நேரங்களில் சட்டபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதில் Gates-க்கு ஆர்வம் இல்லை என்றாலும், தங்கள் வெளி நடவடிக்கைகள் நிறுவனத்திடம் தங்களுக்கு உள்ள பொறுப்புகளுடன் முரண்படவில்லை அல்லது அவற்றில் குறுக்கிடவில்லை அல்லது பிற வகையில் Gates-ஐ மோசமாகக் காட்டவில்லை என்பதை ஊழியர்கள் உறுதிப்படுத்த வேண்டும். உதாரணமாக, நிறுவனத்தின் ஒப்புதல் இல்லாமல் ஒரு Gates ஊழியர் பின்வருவனவற்றைச் செய்யக் கூடாது:

- Gates இயங்குவது போன்ற ஒரு துறையில் அல்லது அதற்குப் போட்டியாக சுயதொழிலில் அல்லது ஊதியப் பணியில் அல்லது ஊதியமற்ற பணியில் ஈடுபடுதல்;

- உரிமைத்துவம் உள்ள அல்லது ரகசியக்காப்புள்ள நிறுவனத் தகவல்களை சொந்த ஆதாயத்திற்கோ நிறுவனத்திற்குத் தீங்கு ஏற்படும் வகையிலோ பயன்படுத்துதல்;
- நிறுவனத்தின் கொள்கைகளின் கீழ் அனுமதிக்கப்படும் சிறு அளவுப் பயன்பாடு தவிர நிறுவன சொத்துக்களை அல்லது உழைப்பை சொந்தப் பயனுக்காகப் பயன்படுத்துவது; அல்லது
- நிறுவனத்திற்கு விற்கும் அல்லது குத்தகைக்கு விடும் நோக்கத்துடன் எந்த வித சொத்துக்களிலும் எந்த நலனையும் வாங்குதல்.

## 4. நிறுவன தொழில்வணிக வாய்ப்புகள்

இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் நிறுவனத்தின் முறையான தொழில்வணிக நலன்களை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பு கிடைக்கும்போது அவ்வாறு செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் நிறுவனத்தின் சொத்துக்களை, தகவல்களை அல்லது நிலையை சொந்த ஆதாயத்திற்காக, அல்லது நிறுவனத்துடன் போட்டியிடுவதற்காகப் பயன்படுத்தக் கூடாது. மேலும், இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் நிறுவனத்தின் சொத்துகளை அல்லது தகவல்களை அல்லது ஒரு நபரின் பதவியைப் பயன்படுத்துவதன் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற, Gates-க்கு ஆர்வம் அளிக்கக்கூடியதாக அந்த நபர் காரணத்துடன் நம்புகின்ற ஒரு தொழில் வாய்ப்பைத் தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ளக் கூடாது (அல்லது ஒரு வெளித் தரப்புக்குத் திருப்பி விடக் கூடாது). பின்வரும் சூழ்நிலைகளில் இந்த வாய்ப்புகள் Gates-க்கு உரியவை:

- நிறுவனம் அந்த வாய்ப்புக்கான அளிப்புறுதியைப் பெற்றுள்ளது அல்லது அந்த வாய்ப்பை நாடுகிறது;
- அந்த வாய்ப்பானது நிறுவனத்தின் தொழில்துறையில் அல்லது தொழில்வணிகப் பிரிவில் உள்ளது;
- நிறுவனம் அந்த வாய்ப்பை வளர்த்துக்கொள்ள ஊழியர்களை அல்லது வசதிகளை ஒதுக்கியுள்ளது; அல்லது
- நிறுவனம் அதற்கு வளங்களை அல்லது நிதியை அளித்திருக்கிறது.

## 5. ரகசியக்காப்பு

### 5.1 ரகசியக்காப்புள்ள தகவல்கள்

ரகசியக்காப்புள்ள தகவல்கள் தொடர்ந்து ரகசியக்காப்புடன் இருப்பது முக்கியமாகும். பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யப்படாத எந்தத் தகவல்களும் ரகசியக்காப்புள்ள தகவல்களில் அடங்கும். இதில் பின்வருவன உட்பட Gates-இன் தற்போதைய அல்லது எதிர்நோக்கப்படும் தொழில்வணிக நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களும் அடங்கலாம்:

- செயல்பாடுகள்;
- விலை நிர்ணயம்;
- கண்டுபிடிப்புகள்;
- நிகழ்முறைகள்;
- நிதி ரீதியான செயல்திறன் மற்றும் தரவுகள்;
- எதிர்கால வாய்ப்புகள்;
- வர்த்தக ரகசியங்கள் மற்றும் செய்முறை அறிவு;
- வாங்குதல் மற்றும் உடைமை துறப்பு வாய்ப்புகள்;
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு;
- வாடிக்கையாளர் மற்றும் சப்ளையர் தகவல்கள்;
- ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் அல்லது பிற வெளித் தரப்புகளிடம் பெற்ற தனிப்பட்ட முறையில் அடையாளம் காட்டத்தக்க தகவல்கள்
- தகவல்கள் ரகசியக்காப்புடன் வைத்திருக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன் எந்த வெளித் தரப்பாலும் அளிக்கப்படும் எந்தப் பொதுவல்லாத தகவல்களும்;
- நமது ஊழியர்களின் அடையாளம், அவர்களது பொறுப்புகள், ஊதியம் அல்லது அனுபவத்தைப் பற்றிய அமைப்பு விவரப்படங்கள் மற்றும்/அல்லது வேறு எந்தத் தகவல்களும்.

உங்கள் ரகசியக்காப்புள்ள பணி விஷயங்களை நண்பர்களோடு, உறவினர்களோடு அல்லது ஊழியரல்லாத மற்றவர்களோடு, அல்லது மின்தூக்கிகள், வெகுமக்கள் போக்குவரத்து வாகனங்கள் (விமானங்கள் உட்பட) அல்லது உணவகங்கள் போன்ற எந்தப் பொது இடங்களிலும் பேசக் கூடாது.

பின்வரும் சூழ்நிலைகளில் தவிர எந்த இயக்குநரும், அலுவலரும் அல்லது ஊழியரும் நிறுவனத்தின் ரகசியக்காப்புள்ள அல்லது உரிமைத்துவத் தகவல்களை நிறுவனத்திற்கு உள்ளேயோ வெளியிலோ யாருக்கும்

வெளிப்படுத்தக் கூடாது: (i) பெறுநர் நிறுவனத்தின் ஊழியர், அவருக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்ற அவருக்கு இந்தத் தகவல்கள் தேவைப்படுகின்றன, அல்லது (ii) பெறுநர் இத்தகைய தகவல்களைப் பெற நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஊழியரல்லாத வெளித் தரப்பு. நிதிப் பகுப்பாய்வாளர்கள், வரவுத் தெரிவிப்பு முகமைகள், பத்திரிகையாளர்கள் அல்லது பிற சந்தைப் பங்கேற்பாளர்கள் போன்ற ஊழியரல்லாத நபர்களிடமிருந்து Gates தொடர்பாக வரும் எல்லாக் கேள்விகளும் ஒழுங்குமுறை FD -ஐப் பின்பற்றுவதற்கான நிறுவனத்தின் கொள்கை மற்றும் செயல்முறைகளின்படி கையாளப்பட வேண்டும்.

தலைமை மார்க்கெடிங் அதிகாரியின் வெளிப்படையான முன்கூட்டிய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு Gates ஊழியரும் நிறுவனத்தின் சார்பாக ஊடகங்களில் பேசக்கூடாது. பொருளை மேம்படுத்தும் சாத்தியமுள்ள, பொதுவெளியில்-ைஇல்லாத தகவல்களை உள்ளடக்கிய மீடியாவுடனான எந்தவொரு தகவல்தொடர்பும், அதுவும் ஒழுங்குமுறை FD உடன் இணங்குவதற்கான கொள்கை மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க, தலைமை சட்ட அதிகாரியால் முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அத்துடன், பெரும்பாலான ஊழியர்கள் வேலையில் சேர்க்கப்படும்போது ஒரு தனி ரகசியக்காப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும். இப்படி ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதாக உங்களுக்கு நினைவில்லை என்றால், உங்கள் தொழில்வணிகப் பிரிவுக்கான எந்தப் பொருந்தும் ஆவணங்கள் அல்லது கொள்கைகளின் நகல் ஒன்றையும் உங்கள் மனிதவளத் துறையிடம் (Human Resources Department) கேட்டுப் பெறுங்கள்.

நிறுவனத்தில் செய்யும் வேலையிலிருந்து அல்லது நிறுவனத்திற்கு அளிக்கும் சேவையிலிருந்து வெளியேறும்போது, நீங்கள் உங்களிடம் உள்ள எல்லா ரகசியக்காப்புள்ள தகவல்களையும் திருப்பித் தர வேண்டும். நீங்கள் நிறுவனத்தில் வேலை செய்தபோது அல்லது நிறுவனத்திற்குச் சேவை அளித்தபோது தெரிந்துகொண்ட எந்த ரகசியக்காப்புள்ள தகவலையும் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். நீங்கள் உங்கள் முந்தைய வேலையில் பெற்ற தகவல்களும் அதே மரியாதையுடன் கையாளப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்டது போக, தற்போதுள்ள அல்லது முந்தைய ஊழியர்களுக்குப் பொருந்தும் வேறு எந்த ரகசியக்காப்பு அல்லது வெளிப்படுத்தாமை ஒப்பந்தமும் போக (அது எழுத்துவடிவத்தில் இருந்தாலும் பிற வடிவத்தில் இருந்தாலும், ஒரு வேலையளிப்பு ஒப்பந்தம், பிரிவு ஒப்பந்தம்

அல்லது அதே போன்ற வேலையளிப்பு அல்லது ஊதிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இருப்பது உட்பட), எந்த அமெரிக்கக் கூட்டமைப்பு சார்ந்த, மாநில அல்லது உள்ளூர் சட்டத்தின் அல்லது ஒழுங்குமுறையின் சாத்தியமான மீறல்கள் தொடர்பாகத் தற்போதுள்ள அல்லது முன்னாள் ஊழியர் யாரையும் எந்த அமெரிக்கக் கூட்டமைப்பு சார்ந்த, மாநில அல்லது உள்ளூர் அரசாங்க அல்லது சட்ட அமலாக்கக் கிளை, முகமை அல்லது அமைப்புடனும் (கூட்டாக, “அரசாங்க அமைப்பு”) தொடர்புறுத்துவதை, அமைப்புக்கு ஒத்துழைப்பதை, அல்லது அமைப்பிடம் புகார் தாக்கல் செய்வதை, அல்லது இத்தகைய எந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குமுறையின் அம்பலப்படுத்துநர் ஏற்பாடுகளின்படியும் பாதுகாக்கப்படும் எவற்றையும் எந்த அரசாங்க அமைப்பிடமும் பிற வகையில் வெளிப்படுத்துவதை இந்த நெறி தடுக்கவில்லை; இந்த ஒவ்வொரு சூழ்நிலையிலும், பின்வரும் நிபந்தனைகள் பொருந்தும்: (i) ஒவ்வொரு சூழ்நிலையிலும் இத்தகைய தொடர்புறுத்தல்களும் வெளிப்படுத்தல்களும் பொருந்தும் சட்டத்தின்படி அமைந்திருக்க வேண்டும், (ii) இத்தகைய வெளிப்பாட்டுக்கு உட்படும் தகவல்கள் - அந்தத் தகவல்கள் இவ்வாறு வெளிப்படுத்தப்படுவது 17 CFR 205.3(d)(2), பொருந்தும் அரசு வழக்கறிஞர் நடத்தை விதிகள், அல்லது பிற வகையில் மற்றபடி ஒரு வழக்கறிஞரால் அனுமதிக்கப்படும் என்றால் தவிர - தற்போதுள்ள அல்லது முன்னாள் ஊழியரால் வழக்கறிஞர்-கட்சிக்காரர் சிறப்புரிமைக்கு உட்பட்ட ஒரு தொடர்புறுத்தலின் மூலம் பெறப்பட்டிருக்கக் கூடாது. மேற்கூறப்பட்டவற்றுடன் முரண்படும் எந்த ஒப்பந்தமும் மேற்கூறப்பட்டவற்றுடன் ஒத்துப்போவதற்காக நிறுவனத்தால் திருத்தப்பட்டதாக இதன் மூலம் கருதப்படும்.

### 5.2 தனிப்பட்ட தரவுகள்

நாம் நமது தொழில்வணிகத்தின் போக்கில் ஏராளமான நபர்களின் தனிப்பட்ட தரவுகளைப் பெறுகிறோம், வைத்திருக்கிறோம். நிறுவன ஊழியர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களுக்கான அணுகல், Gates-க்குள் “அறியும் தேவை” உள்ள நபர்களுக்கு மட்டுமே கிடைக்கும். இவை ஒழுங்கான மற்றும் தேவையான தொழில்வணிக நோக்கங்களுக்காக மட்டும் அல்லது ஒழுங்கான அல்லது சட்டபூர்வத் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்காகப் பிற ஊழியர்களுக்கு அல்லது வெளித் தரப்புகளுக்கு அனுப்பப்படும். தனிப்பட்ட தகவல்களைப் பராமரிக்கும் பொறுப்புள்ள ஊழியர்கள், அந்தத் தகவல்கள் முறையின்றி வெளிப்படுத்தப்படவில்லை அல்லது தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என்று உறுதிப்படுத்த வேண்டும். மேலும் தகவல்களுக்கு, உலகளாவிய கொள்கைகள் பக்கத்தில் (Global Policies Page) Gates Industrial Europe SARL அகவுரிமைக் கொள்கை (Gates Industrial Europe SARL Privacy Policy) உட்பட Gates-இன் உலகளாவிய நிறுவன அகவுரிமைக்

கோட்பாடுகளையும் (Global Internal Privacy Principles) குறிப்பான பிராந்தியக் கொள்கைகளையும் பாருங்கள்.

நாம் வைத்திருக்கும் உங்கள் தனிப்பட்ட தரவுகளை நீங்கள் பார்க்க விரும்பினால், அல்லது இத்தகைய தரவுகளைப் பற்றி நீங்கள் ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டும் என்றால், தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்: privacy@gates.com.

## 6. தரம்

தரம் என்பது Gates-இல் ஒரு மைய மதிப்பீடாகும். தரத்திற்கான நமது தரநிலைகளை எட்டுவதில் ஒழுக்கத்துடன் கவனம் செலுத்தும் கலாச்சாரம் நம்மிடம் உள்ளது. நமது ஊழியர்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளை முனைப்புடன் எதிர்நோக்கி வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை விஞ்சுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். நமது தயாரிப்புகள், அமைப்புகள், சேவைகள் ஆகியவற்றின் சமரசமற்ற தரம் மற்றும் பாதுகாப்பில் Gates பற்றுறுதி கொண்டுள்ளது.

## 7. நியாயமாகக் கையாளுதல்

### 7.1 நியாயமாகப் போட்டியிடுதலும் ஏகபோக எதிர்ப்பு மற்றும் நியாயமான போட்டியிடல் சட்டங்களும் (Antitrust and Fair Competition Laws)

சுதந்திரத் தொழில்நிறுவனத்திற்கு ஊக்கமளிக்க அதிமுக்கியமாக உள்ள நியாயமான உலகளவு வர்த்தக நடைமுறைகளை நாம் ஆதரிக்கிறோம். Gates-இன் உலகளாவிய ஏகபோக எதிர்ப்பு மற்றும் நியாயமான போட்டியிடல் கோட்பாடுகளும் (Global Antitrust and Fair Competition Principles) தொடர்பான பிராந்தியக் கொள்கைகளும், போட்டியையும் ஒரு சுதந்திரத் தொழில்நிறுவன வர்த்தக அமைப்பையும் ஊக்குவிப்பதில் உள்ள இந்தப் பற்றுறுதியைப் பிரதிபலிக்கின்றன; இவற்றை உலகளாவிய கொள்கைகள் பக்கத்தில் காணலாம். பொருந்தும் ஏகபோக எதிர்ப்பு மற்றும் நியாயமான போட்டியிடல் சட்டங்கள் அனைத்தையும் முழுமையாகப் பின்பற்றுவது நமது கொள்கையாகும்.

பல நாடுகளில், விதிக்கப்பட வேண்டிய விலைகள், போட்டி ரீதியான ஏலமுயற்சி, அணுகப்பட வேண்டிய வாடிக்கையாளர்கள் அல்லது சேவையளிக்கப்பட வேண்டிய புவியியல் பகுதிகள் ஆகியவை தொடர்பாகப் போட்டியாளர்கள் தங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் செய்துகொள்வது

அனுமதிக்கப்படுவதில்லை. சட்டவிரோதமான, போட்டி எதிர்ப்பு நடத்தைக்கான எடுத்துக்காட்டுகளில் பின்வருவனவும் அடங்கும்:

- ஏலமுயற்சிகளைப் போட்டியாளர்களுடன் ஒருங்கிணைத்தல்;
- வாடிக்கையாளர்களை அல்லது சந்தைகளை ஒதுக்கித்தருதல்;
- ஒரு விலை வரம்பை அல்லது ஒரு குறைந்தபட்ச அல்லது அதிகபட்ச விலையை நிர்ணயித்தல்;
- வெளியீட்டைக் குறைத்தல் அல்லது டெலிவரி நேரத்திட்டங்களைக் கட்டுப்படுத்துதல்;
- தள்ளுபடிகள், விலைக் குறைப்புகள், அல்லது கடன் விதிமுறைகளை நிர்ணயித்தல்;
- குறிப்பிட்ட சப்ளையர்கள் அல்லது வாடிக்கையாளர்களைப் புறக்கணிக்க ஒப்புக்கொள்ளுதல்;
- லாபங்கள், செலவுகள், விலைகள் அல்லது விற்பனையின் பிற விதிமுறைகள் அல்லது நிபந்தனைகள் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல்.

இந்தச் சட்டங்களை மீறுவது நிறுவனத்தின் மீதும் அதன் ஊழியர்கள் மீதும் கடுமையான கிரிமினல் மற்றும் குடிமைத் தண்டனைகள் விதிக்கப்பட வழிவகுக்கக்கூடும்.

Gates தொழில் நடத்தும் பல்வேறு அதிகாரவரம்புகளில் இருக்கும் ஏகபோக எதிர்ப்பு மற்றும் நியாயமான போட்டியிடல் சட்டங்களின் தேவைப்பாடுகளைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கலாம். ஒரு போட்டியாளருடனான எந்தத் தொடர்பும் அபாயகரமாக இருக்கக்கூடும். போட்டியாளர்கள் இடையிலான ஓர் ஒப்பந்தமானது சட்ட ரீதியாகக் கேள்விக்கு உட்படுத்தப்பட எழுத்துமூலமாகவோ துல்லியமாகவோ இருக்கத் தேவையில்லை. சட்டவிரோத ஒப்பந்தங்கள் பல சமயங்களில் “சிறு உரையாடல்கள்”, “இயல்பான கலந்துரையாடல்கள்”, தொழில்வணிகத் தகவல்களின் “தீங்கற்ற” பரிமாற்றங்கள் ஆகியவற்றின் சந்தர்ப்ப சாட்சியத்தின் மூலம் நடத்தப்படுகின்றன. கலந்துரையாடல்கள் ஒரு பெரிய, முறைசார்ந்த குழுவில் நடந்தாலும் சரி, ஒரு வர்த்தகச் சங்க சந்திப்புக்குப் பின்பு நிகழும் கூட்டங்கள் போன்ற சமூக அமைவில் நடந்தாலும் சரி, அவற்றை நீங்கள் தவிர்க்க வேண்டும். போட்டியாளர்கள் சம்பந்தப்பட்ட வர்த்தகக் குழு நடவடிக்கைகளில் அல்லது கூட்டுழைப்புச் செயல்திட்டங்களில் பங்கேற்கும்போது - அவை பொது நலனுக்காக நடத்தப்படுபவை போல் தெரிந்தால்கூட - நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஒரு போட்டியாளர் போட்டி ரீதியாக முக்கியத்துவம் உள்ள ஒரு தலைப்பு பற்றி அல்லது ஏகபோக எதிர்ப்பு அல்லது நியாயமாகப் போட்டியிடல் சட்டங்களை அல்லது நமது நிறுவனக் கொள்கையை மீறக்கூடியவை என்று நீங்கள் நம்பும் வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் பேசத் தொடங்கினால், நீங்கள் உடனடியாகவும் உறுதியாகவும் அது பற்றிக் கலந்துரையாட மறுக்க வேண்டும்; கூடுமான விரைவில் உங்கள் தொழில்வணிகப் பிரிவுக்குள் இருக்கும் தகுந்த நபருக்குத் தெரியப்படுத்த வேண்டும், அல்லது அற மற்றும் பின்பற்றல் உதவி எண்ணை (Ethics and Compliance Hotline) அழைக்க வேண்டும்.

### 7.2 ஊழியர் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

பூஜ்யப் பணியிட பாதிப்புகள் என்ற இலக்குடன் ஒரு பாதுகாப்பான பணிச் சூழலை வங்குவதில் நாம் பற்றுறுதி கொண்டிருக்கிறோம். ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பணி நிலைகளும் சம்பவங்களைத் தடுப்பதும் நமது தொழில்வணிகத்தை இயக்குவதன் மிக முக்கியமான பகுதிகள். பொருந்தும் உடல்நல மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் அனைத்தையும் நாம் முழுமையாகப் பின்பற்ற வேண்டும். நீங்கள் பணிபுரியும் சூழல் எந்தக் காரணத்திற்காவது பாதுகாப்பற்றதாக அல்லது அச்சுறுத்துவதாக ஆனால், நீங்கள் செய்துகொண்டிருப்பதை உடனே நிறுத்திவிட்டு, அந்தப் பிரச்சனையை உங்கள் தொழில்வணிகப் பிரிவுக்குள் இருக்கும் தகுந்த நபருக்குத் தெரியப்படுத்த வேண்டும், அல்லது அற மற்றும் பின்பற்றல் உதவி எண்ணைப் பயன்படுத்த வேண்டும்.

பின்வருபவை உங்கள் பொறுப்புகளாகும்:

- பணிச் சூழலைப் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் சம்பவங்களையும் பாதிப்புகளையும் தவிர்த்தல்;
- பாதுகாப்பான பணிச் செயல்முறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுதல்;
- மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்தல்;
- பாதுகாப்பற்ற சூழ்நிலைகளை எப்படி அடையாளம் காண்பது என்று கற்றுக்கொள்ளுதல்;
- சம்பவங்கள், பாதிப்புகள் அல்லது பாதுகாப்பற்ற பணி நிலைகள் அல்லது உடல் ரீதியான அல்லது உணர்ச்சி ரீதியான கொடுமைப்படுத்துதல் சூழ்நிலைகளைத் தெரிவித்தல்.

மது போதையில் அல்லது போதைப் பொருட்களின் போதையில் வேலை செய்யும் ஊழியர்கள், தங்களுக்கும் பிற ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் அபாயம் விளைவிக்கிறார்கள். பணியிடத்தில் அல்லது நிறுவன

வேலையின்போது மோட்டார் வாகனங்களை அல்லது பிற இயந்திரங்களை இயக்குகையில் மதுவையும் போதைப் பொருட்களையும் வைத்திருக்கவும் பயன்படுத்தவும் நிறுவனம் எந்த ஊழியரையும் அனுமதிக்காது. இருந்தாலும், அதிகாரமளிக்கப்பட்ட நிறுவன விழாக்களில் அல்லது வாடிக்கையாளர் கேளிக்கை போன்ற குறிப்பிட்ட சில ஒழுங்கான தொழில்வணிக அமைவுகளில் ஊழியர்கள் மது அருந்தலாம். ஆனால் ஊழியர்கள் எல்லா சமயங்களிலும் பொறுப்பாக நடந்துகொண்டு மிதமாகக் குடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

பணியிடத்தை வன்முறை அல்லது வன்முறைக்கான அச்சுறுத்தல் இல்லாமல் வைத்திருப்பதில் நிறுவனம் பற்றுறுதி கொண்டுள்ளது. Gates-க்கு அதன் வேலை இடங்களில் எதிலும் வன்முறைச் செயல்கள் மற்றும்/அல்லது வன்முறைக்கான அச்சுறுத்தல்கள் மீது *பூஜ்ய சகிப்புத்தன்மை* கொண்டிருக்கிறது. எந்த வன்முறையான நடத்தையும் அல்லதுவன்முறை, விரோதம், அல்லது அச்சுறுத்தல் நிலவும் ஒரு சூழலை உருவாக்கும் எந்த நடத்தையும் எங்கிருந்து வந்தாலும் சகித்துக்கொள்ளப்படாது. ஊழியர்கள் நிறுவன வளாகத்தில் இருக்கும்போது எந்த சமயத்திலும் ஒரு ஆயுதத்தை வைத்திருக்கக் கூடாது. வன்முறைச் செயல்களுக்கான வாய்ப்பைக் குறைக்க செயலூக்கமுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வன்முறைச் செயலும் அல்லது அச்சுறுத்தலும் உடனடியான மற்றும் உறுதியான பதில்வினையை விளைவிக்கும். Gates-இலிருந்து வேலைநீக்கம் செய்யப்படுவதும் இதில் அடங்கலாம். எந்த அச்சுறுத்தும் நடத்தையையும் உடனடியாக மேலாண்மைக்குத் தெரிவிப்பது ஒவ்வொரு ஊழியருக்கும் உள்ள பொறுப்பாகும்.

### 7.3 சமமாக நடத்துதல்

நம் எல்லா ஊழியர்களையும் வேலைக்கான தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களையும் சமமாக நடத்துவதில் நாம் உறுதியாகப் பற்றுறுதி கொண்டிருக்கிறோம். வேலையின் எல்லா அம்சங்களிலும் சம வாய்ப்பு என்பது நமது மிக உறுதியான மற்றும் மிக அடிப்படையான நம்பிக்கைகளில் ஒன்றாகும். எந்தச் சட்டவிரோதப் பாகுபாட்டையும் துன்புறுத்தலையும் அல்லது பதிலடியையும் நாம் சகித்துக்கொள்ள மாட்டோம்.

சட்டவிரோதப் பாகுபாடு, துன்புறுத்தல், பதிலடி, கொடுமைப்படுத்துதல் (உடல் ரீதியாக அல்லது பிற வகையில்), அவமரியாதை, ரகளை, கலைத்தல் அல்லது தொழில்முறையல்லாத பிற நடத்தைகள் இல்லாத ஒரு பணிச் சூழலை Gates தடை அளிக்க உதவுவது நம் ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பாகும். ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் அல்லது வேறு எந்த

தொழில்வணிகத் தொடர்புகளையும் வயது, இனம், நிறம், பாலினம், பாலீர்ப்பு நிலை, பாலின அடையாளம் அல்லது வெளிப்பாடு, திருநர் நிலை, மதம், பிறந்த நாடு, மூதாதையர், குடியுரிமை, உடலூனம், ராணுவப் பணி ஓய்வு அல்லது திருமண நிலை, மரபணுவியல் தகவல்கள், கர்ப்பம், குழந்தைப் பிறப்பு அல்லது தொடர்பான மருத்துவ நிலைகள், அல்லது கூட்டமைப்பு சார்ந்த, மாநில அல்லது உள்ளூர்ச் சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்ற பொருந்தும் நிலையின் (கூட்டாக, "பாதுகாக்கப்பட்ட வகைப்பாடுகள்") அடிப்படையில் பாகுபாடு காட்டுவதை அல்லது துன்புறுத்துவதை நிறுவனம் சகித்துக்கொள்ளாது. சக ஊழியர்கள், மேற்பார்வையாளர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் அல்லது நிறுவனத்துடன் தொழில் நடத்தும் பிற நபர்களின் பாலியல் துன்புறுத்தலை நிறுவனம் சகித்துக்கொள்ளாது, அலட்சியப்படுத்தாது, அனுமதிக்காது. இந்தக் கொள்கையின் எந்த மீறலும், வேலைநீக்கம் வரையிலும் வேலைநீக்கத்தை உள்ளிட்டதுமான தகுந்த ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டது. இந்தக் கொள்கையின் எந்த மீறலையாவது நீங்கள் கவனித்தால், நீங்கள் உங்கள் தொழில்வணிகப் பிரிவுக்குள் இருக்கும் தகுந்த நபருக்குத் தெரியப்படுத்த வேண்டும் அல்லது அற மற்றும் பின்பற்றல் உதவி எண்ணை அழைக்க வேண்டும்.

### 7.4 பன்மையும் அரவணைப்பும்

Gates-இல் ஊழியர் பன்மை நமது தொழில்வணிகக் குறிக்கோள்களை எட்டுவதில் ஒரு முக்கியக் கூறாகும். நமது பலதரப்பட்ட ஊழியர் தளமானது நாம் உலகெங்கும் உள்ள நமது வாடிக்கையாளர்களுக்கு சேவையளிப்பதில் மேலும் புதுமையாகவும் செயல்திறத்தோடும் செயல்பட உதவுகிறது. நாம் ஒரு வெளிப்படையான, அரவணைக்கின்ற, மரியாதை நிறைந்த பணிச்சூழலில் பற்றுறுதி கொண்டிருக்கிறோம்.

### 7.5 சுற்றுச்சூழல்

நாம் நமது உலகம் தழுவிய செயல்பாடுகளை இயற்கைச் சூழலுக்கான மரியாதையுடன் நடத்துவதில் பற்றுறுதி கொண்டிருக்கிறோம். பொருந்தும் சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் தரநிலைகளைப் பின்பற்றும் பொறுப்பு ஊழியர்களுக்கு உள்ளது. திட மற்றும் அபாயகரமான கழிவுகள் எப்போதுமே பொறுப்பாகவும் பொருந்தும் சட்டத்தின்படியும் கையாளப்பட வேண்டும். எப்போதெல்லாம் சாத்தியமோ அப்போது சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வு கொண்ட, நிலைநிறுத்தத்தக்க நடைமுறைகளில் ஈடுபடும்படி ஊழியர்களை ஊக்குவிக்கிறோம்.

பொருந்தும் எந்த சுற்றுச்சூழல் சட்டத்தின் எந்த மீறலைப் பற்றியாவது உங்களுக்குத் தெரியவந்தால், நீங்கள் உடனே உங்கள் தொழில்வணிகப் பிரிவுக்குள் இருக்கும் தகுந்த நபருக்குத் தெரியப்படுத்த வேண்டும் அல்லது அற மற்றும் பின்பற்றல் உதவி எண்ணை அழைக்க வேண்டும்.

### 7.6 சப்ளையர் மற்றும் வாடிக்கையாளர் உறவுகள்

நாம் நமது சப்ளையர் மற்றும் வாடிக்கையாளர் உறவுகளுக்குச் சட்டபூர்வமான, செயல்திறமுள்ள, நியாயமான நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம். நமது சப்ளையர் உறவுகளின் தரம், பல சமயங்களில் நமது வாடிக்கையாளர் உறவுகளின் தரத்தின் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சப்ளையர் உறவுகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக நீங்கள் அறிய வேண்டிய வழிகாட்டுநெறிகளை Gates சப்ளையர் நடத்தை நெறி (Gates Supplier Code of Conduct) எடுத்துரைக்கிறது. இந்தக் கொள்கையை இங்கு காணலாம்: https://www.gates.com/us/en/about-us/policies.

இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் சப்ளையர்களையும் வாடிக்கையாளர்களையும் நியாயமாகவும் நேர்மையாகவும் கையாள வேண்டும். நமது தயாரிப்புகளையும் சேவைகளையும் அவற்றின் நிறைகளின் அடிப்படையில் விற்பதும் போட்டியாளர்களின் தயாரிப்புகளையும் சேவைகளையும் பற்றி இழிவாகப் பேசுவதைத் தவிர்ப்பதும் Gates-இன் கொள்கையாகும். போட்டியாளர்களின் இயல்பு, நிதி நிலை, அல்லது அவர்களுக்கு இருக்கக்கூடிய சட்ட அல்லது ஒழுங்குமுறைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுதல் என்று வரும்போது இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் கவனமாக இருக்க வேண்டும்.

வாங்குவதும் விற்பதும் நெருங்காமல், எந்தக் கையூட்டுகள், லஞ்சங்கள், ரகசிய கமிஷன்கள், அன்பளிப்புகள் அல்லது உதவிகளும் இல்லாமல் செய்யப்பட வேண்டும். சட்ட ரீதியாக அனுமதிக்கப்படும் சூழலிலும் நிறுவனக் கொள்கைகள் மற்றும் உள்ளூர் தொழில்வணிக நடைமுறைகளின்படியும், நிறுவனத்தோடு தொழில் நடத்துகின்ற அல்லது தொழில் நடத்த விரும்புகின்ற நபர்களுக்கும் நபர்களிடமிருந்தும் சிறு அன்பளிப்புகளும் நியாயமான அளவு கேளிக்கையும் தரப்படலாம், பெறப்படலாம். அனுமதிக்கப்பட்ட அன்பளிப்பு அல்லது கேளிக்கை எதுவும் பெறுநருக்கு நிஜமான தனிப்பட்ட வளத்தை அளிக்கும்படியான அல்லது பெறுநருக்கு ஒரு கடப்பாட்டை (கருதப்பட்டாலும் உண்மையாக இருந்தாலும்) ஏற்படுத்தும்படியான, அல்லது பொதுப் பார்வைக்கு உட்படுத்தப்பட்டால் நிறுவனத்தை அல்லது கொடையாளரை அல்லது பெறுநரைத் தவறாகக் காட்டும்படியான தன்மையை அல்லது மதிப்பைக்

கொண்டிருக்கக் கூடாது. ரொக்கம் அல்லது ரொக்கத்திற்கு நிகரானவை (அன்பளிப்பு அட்டைகள் உட்பட) தரப்படவோ ஏற்கப்படவோ கூடாது. இருந்தாலும், ஊழியர்களுக்கு நிறுவனத்திற்கு வெளியே தனிப்பட்ட உறவுகள் இருக்கும் என்பதையும் பல சூழ்நிலைகளில் தனிப்பட்ட உறவுகளும் தொழில் உறவுகளும் சந்திக்கக்கூடும் என்பதையும் Gates அங்கீகரிக்கிறது. அந்த உறவுகளின் பின்னணியில் தரப்படும் மற்றும் ஏற்கப்படும் அன்பளிப்புகள் சட்டபூர்வமானவையாகவும் முறையானவையாகவும் இந்தச் சூழ்நிலைகளில் நியாயமாக முறையானவையாகப் பார்க்கப்படும் என்றும் உறுதிப்படுத்த, ஊழியர்கள் அந்த அன்பளிப்புகள் விஷயத்தில் சிந்தித்துச் செயல்படும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள். அன்பளிப்புகள், கேளிக்கை, விருந்தோம்பல் ஆகியவை குறித்த நிறுவனத்தின் கொள்கைளைப் பற்றிய மேலும் விரிவான வழிகாட்டுநெறிகளுக்கு, உலகளாவிய கொள்கைகள் பக்கங்களில் இருக்கும் Gates-இன் அன்பளிப்புக் கொள்கையையும் (Gift Policy) ஊழல் எதிர்ப்புக் கொள்கையின் (Anti-Corruption Policy) பகுதி 4-ஐயும் பாருங்கள்.

பின்தங்கியவர்கள், சிறுபான்மையினர், பெண்கள் ஆகியோருக்கு சொந்தமான எந்த சப்ளையர் நிறுவனங்களும் உட்பட எப்போதுமே சப்ளையர்கள் நமது கொள்முதல் அளவில் ஒரு பங்கை ஈட்டுவதற்குப் போட்டி ரீதியான ஒரு வாய்ப்பை இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் அளிக்க வேண்டும்; தரம், செலவு, டெலிவரி ஆகியவை குறித்த வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளைத் தொடர்ந்து பூர்த்திசெய்து விஞ்சுவதை உறுதிப்படுத்துவதில் சப்ளையரின் ஆதரவை நாடிப் பெற வேண்டும்.

நிறுவனத்தைப் பிணைக்கும் நோக்கத்துடன் செய்யப்படும் எந்த ஒப்பந்தத்தையும் நீங்கள் அனுமதியின்றி ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது. Gates-ஐப் பிணைக்கும் குறிப்பிட்ட சில ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளித்துக் கையொப்பமிடும் அதிகாரம் உள்ள நபர்களை அடையாளம் காட்டும் ஒப்பந்த மற்றும் கையொப்ப ஒப்புதல் கொள்கைகளை நிறுவனம் நிறுவியிருக்கிறது ("அதிகார ஒதுக்கீடு"); அந்தக் கொள்கைகள் Gates அக பிணையத்தின் ஊழியர் கருவிப்பெட்டி (Employee Toolbox) பகுதியில் பராமரிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு ஒப்பந்தத்திற்கு எந்த ஊழியர்களிடம் அதிகாரமளிப்பு அதிகாரம் உள்ளது என்பது பற்றி ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டும் என்றால், Gates கூட்டாண்மை நிதித் துறையைத் (Corporate Finance Department) தொடர்பு கொள்ளுங்கள். குறிப்பிட்ட ஒரு ஒப்பந்தத்திற்கு எந்த ஊழியர்களிடம் கையொப்ப அதிகாரம் உள்ளது என்பது பற்றி ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டும் என்றால், Gates சட்டத் துறையைத் (Law Department) தொடர்பு கொள்ளுங்கள்.

### 7.7 மனித உரிமைகள்

மனித உரிமைகளுக்கான சர்வதேசத் தரநிலைகளின்படி மனித உரிமைகளை மதிப்பதில் நாம் பற்றுறுதி கொண்டிருக்கிறோம். நமது தயாரிப்புகள் அவற்றை உருவாக்கும் மனிதர்களிடமும் அவை உருவாக்கப்படும் சமூகங்களிடமும் உள்ள மரியாதையைக் காட்டும் சூழல்களில் உற்பத்தி செய்யப்படுவதை Gates உறுதிப்படுத்தும். Gates நிறுவனம் மனித உரிமைகள் கொள்கையை (Human Rights Policy) மேற்கொண்டுள்ளது. மனித உரிமைகள் கொள்கையின் ஒரு நகல், உலகளாவிய கொள்கைகள் பக்கத்தில் உள்ளது.

## 8. நிறுவன சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல்

### 8.1 நிறுவன சொத்துக்களைப் பயன்படுத்துதல்

நாம் அளிக்கும் சேவைகளின் தரத்தையும் செயல்திறத்தையும் மேம்படுத்த நாம் கணினிகள், தொலைநகல் இயந்திரங்கள், புகைப்பட நகல் இயந்திரங்கள் மற்றும் பிற தொழில்வணிக அமைப்புகளையும் உபகரணங்களையும் பயன்படுத்துகிறோம். நீங்கள் இந்த அமைப்புகளையும் உபகரணங்களையும் Gates-இன் தொழில் தொடர்பான நோக்கங்களுக்கு ஊக்கமளிக்கப் பயன்படுத்த வேண்டும். ஊழியர்கள் பொதுவாக இத்தகைய வளங்களையும் அமைப்புகளையும் சிறு தனிப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள் என்றாலும், அவர்கள் அவற்றைப் பொறுப்பான முறையிலும் அவர்களையோ நிறுவனத்தையோ இழப்பு, பொறுப்பாதல் அல்லது சேதத்திற்கு உட்படுத்தும் என நியாயமாக எதிர்பார்க்கப்படாத வகையிலும் பயன்படுத்த வேண்டும். இந்த அமைப்புகள் மற்றும் உபகரணங்களின் எல்லாப் பயன்பாடும் நிறுவனத்தின் சொந்த முடிவுக்குட்பட்டது; அந்தப் பயன்பாடானது பொருந்தும் சட்டம், Gates-இன் ஏற்கத்தக்க பயன்பாடு கொள்கை (Acceptable Use Policy), இருபயன்பாட்டு சாதனக் கொள்கை (Dual-Use Device Policy), மற்றும் உலகளாவிய கொள்கைகள் பக்கத்தில் உள்ள பிற தொழில்நுட்பக் கொள்கைகளின்படி அமைய வேண்டும். பொதுவாக, ஊழியர்களுக்கு நிறுவனத்தின் பல்வேறு தொழில்நுட்பங்களுக்கான அணுகல் அவர்களது வேலைக்கேற்ப அளிக்கப்படுகிறது. இத்தகைய அணுகலை மொத்தமாக ரத்துசெய்வது உட்படத் தன்னிடம் உள்ள எந்த வழிமுறையின் மூலமும் அணுகலைக் குறைக்க நிறுவனத்திற்கு உரிமை உள்ளது. நீங்கள் இந்தக் கொள்கையை மீறினால் வேலைநீக்கம் வரையிலும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படலாம்.

நமது அமைப்புகளில் அல்லது உபகரணங்களால் உருவாக்கப்படுகின்ற, அவற்றில் உள்ளிடப்படுகின்ற, அல்லது அவற்றில் சேமித்துவைக்கப்படுகின்ற

எல்லாச் செய்திகள், ஆவணங்கள், தரவுகள் மற்றும் பிற பொருட்களும் நிறுவனத்திற்குச் சொந்தமானவை. பொருந்தும் சட்டங்களுக்கு உட்பட்டு, நாங்கள் எந்த சமயத்திலும், உங்களுக்குத் தெரிவித்தோ தெரிவிக்காமலோ, இத்தகைய பொருட்களை அணுகக்கூடும், மேற்பார்வையிடக்கூடும், கண்காணிக்கக்கூடும் மற்றும்/அல்லது வெளிப்படுத்தக்கூடும். இதில் எல்லா மின்னஞ்சல் செய்திளும் இணையப் பயன்பாடும் அடங்கும்.

### 8.2 அரசியல் மற்றும் ஈகை நடவடிக்கைகள்

நிறுவன நிதிகளை அல்லது சொத்துக்களைப் பயன்படுத்தி அமெரிக்காவிலோ எந்த வெளிநாட்டிலுமோ உள்ள எந்த அரசியல் கட்சிக்கும், அரசியல் பிரச்சாரத்திற்கும், அரசியல் வேட்பாளருக்கும் அல்லது அரசு அதிகாரிக்கும், அல்லது எந்த ஈகை அமைப்புக்கும் பங்களிப்புகள் செய்யப்படக் கூடாது - அந்தப் பங்களிப்பு சட்டபூர்வமானதாகவும் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டதாகவும் இருந்தால் தவிர. அரசு அதிகாரிகளின் சார்பாக அல்லது அவர்களது உத்தரவுப்படியோ ஆலோசனைப்படியோ ஈகைப் பங்களிப்புகள் செய்தால், வெளிநாட்டு ஊழல் நடவடிக்கைகள் சட்டம் (Foreign Corrupt Practices Act) யு.கே. லஞ்சமளிப்புச் சட்டம் (UK Bribery Act) ஆகியவை உட்படப் பல்வேறு ஊழல் எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் நிறுவனத்திற்கும் சம்பந்தப்பட்ட எந்த ஊழியர்களுக்கும் பின்விளைவுகள் தீவிரமாக இருக்கக்கூடும். எனவே, ஓர் அரசு அதிகாரிக்கோ தனிநபருக்கோ ஒரு தனிப்பட்ட நன்மையை அளிப்பதற்கான மறைமுக வழியாக நன்கொடைகள் பயன்படுத்தப்படக் கூடாது என்பது நிறுவனத்தின் கொள்கையாகும். கூடுதல் வழிகாட்டுநெறிகளுக்கு ஊழல் எதிர்ப்புக் கொள்கையின் பகுதி 6.0-ஐப் பாருங்கள்.

இந்த நெறியில் இருக்கும் எதுவும் நீங்கள் உங்கள் சொந்த நேரத்தை அல்லது நிதியை நீங்கள் விரும்பும் அரசியல் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்குப் பங்களிப்பதைத் தடுக்கும் நோக்கத்தைக் கொண்டதல்ல. ஈகைப் பணி, சமூகப் பணி, ஈகை நன்கொடைகள் அளித்தல் ஆகியவற்றில் ஊழியர்கள் ஈடுபடுவதை நிறுவனம் அங்கீகரித்து ஊக்குவிக்கிறது. இருந்தாலும், Gates Industrial Corporation அறக்கட்டளை நிகரான அன்பளிப்புத் திட்டத்தின்படி (Foundation Matching Gift Program) அல்லது செயலில் இருக்கும் அது போன்ற பிற திட்டத்தின்படி தவிர, நீங்கள் தனிப்பட்ட முறையில் உங்கள் சொந்த நேரத்தை அல்லது நிதியைப் பங்களித்தால் அதற்கு நிறுவனம் இழப்பீடு அளிக்காது, செலவைத் திரும்பத் தராது.

### 8.3 நிதி ரீதியான கட்டுப்பாடுகள்

அமெரிக்க பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் (Securities and Exchange Commission), அமெரிக்க அரசு முகமைகள், ஆகியவற்றிடமும் நிறுவனம் தாக்கல் செய்யும் அல்லது சமர்ப்பிக்கும் எல்லா அறிக்கைகளிலும் ஆவணங்களிலும் நிறுவனம் செய்யும் பிற எல்லா தொடர்புறுத்தல்களிலும் பொருந்தும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி முழுமையான, நியாயமான, துல்லியமான, உரிய நேரத்திலான, புரிந்துகொள்ளத்தக்க வெளிப்படுத்தல்களைச் செய்வது நிறுவனத்தின் கொள்கையாகும்.

முதலீட்டாளர்கள், கடனாளர்கள் மற்றும் பிறருக்கு நிறுவனத்தின் நிதி சார்ந்த தகவல்களில் ஒழுங்கான ஆர்வம் உள்ளது. அத்துடன், பங்கு பொதுவில் வர்த்தகம் செய்யப்படும் நிறுவனம் என்ற முறையில், நிறுவனம் அமெரிக்கக் கடன்பத்திரச் சட்டங்கள் உட்பட நமது தொழில்வணிகப் பதிவுகளுக்குரிய ஏராளமான சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் உட்பட்டது. நிறுவனம் தனது நிதி சார்ந்த நடவடிக்கைகளை எல்லா பொருந்தும் சட்டங்கள் மற்றும் கணக்குப்பதிவு நடைமுறைகளையும் பின்பற்றிப் பதிவு செய்ய வேண்டும்; நடப்பு, முழுமையான, துல்லியமான தகவல்களை எந்த மற்றும் எல்லா அரசு முகமைகளுக்கும் வழங்க வேண்டும். Gates-இன் நிதித் தெரிவிப்பின் முழுமைத்தன்மை, எந்தத் தகவல்களின் அடிப்படையில் நமது கணக்குப்பதிவுகளும் பதிவுகளும் அமைந்துள்ளனவோ அவற்றின் செல்லுபடித்தன்மை, துல்லியம், முழுமை ஆகியவற்றின் அடிப்படையிலானது. இத்தகைய தகவல்களை உருவாக்குவதில், நிகழ்முறைப்படுத்துவதில் அல்லது பதிவு செய்வதில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் அவற்றின் முழுமைத்தன்மைக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று நிறுவனம் எதிர்பார்க்கிறது. எல்லா ஊழியர்களும் மேலாண்மையிடம் வெளிப்படையான தெரிவிப்புகளைச் செய்ய வேண்டும். மற்ற விஷயங்கள் போக, இதற்கு அறிக்கைகளில் துல்லியமான தகவல்கள் இருக்க வேண்டும், கணக்குப்பதிவு நூல்கள் நமது அக கட்டுப்பாட்டுகளின்படியும் பொதுவாக ஏற்கப்பட்ட கணக்குப்பதிவுக் கோட்பாடுகளின்படியும் முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்டதைக் குறைக்காமல், ஒரு ஊழியர் தவறான இன்வாய்ஸ்களை அல்லது செலவின அறிக்கைகளை சமர்ப்பித்ததில், காசோலைகளைப் போலியாக்கியதில் அல்லது மாற்றியதில் அல்லது பணச்செலுத்தங்களைத் தவறான தரப்புக்கு அனுப்பியதில், பரிவர்த்தனைகளை அனுமதியின்றிக் கையாண்டதில் அல்லது தெரிவித்ததில், எந்த சொத்துக்களையும் திருடியதில் அல்லது கையாண்டதில், நிதி சார்ந்த முடிவுகளைச் செயற்கையாகப் பெரிதாக்க அல்லது குறைக்க நிதி சார்ந்த

தகவல்களை உருவாக்கியதில் அல்லது கைவினையாற்றியதில், அல்லது நிறுவனத்தின் தணிக்கையாளர்கள், போர்டு, அல்லது நிறுவனத்தின் எந்தத் தொடர்புள்ள கூட்டுநிறுவனமும், இயக்குநர் குழு ஆகியவற்றின் செயல்பாட்டில் முறையின்றி அல்லது ஏமாற்றும் நோக்கத்துடன் அல்லது வலுக்கட்டாயம், கைவினையாற்றுதல் அல்லது திசைதிருப்புதலின் மூலம் குறுக்கிட்டதில் ஈடுபட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த ஊழியர் வேலையிலிருந்து நீக்கப்படுவார்.

நிறுவனம் தனது சொத்துக்களைத் திருட்டிலிருந்து அல்லது கையாடலிலிருந்து பாதுகாக்கும் வகையில் நிதி சார்ந்த கட்டுப்பாடுகள், நடைமுறைகள், செயல்முறைகள் ஆகியவற்றை உருவாக்கியுள்ளது. எல்லா ஊழியர்களுக்கும் - அவர்கள் நிதி அல்லது தொடர்பான ஒரு துறையில் பணிபுரிந்தாலும் பணிபுரியாவிட்டாலும் - சந்தேகத்திற்குரிய நடவடிக்கையை அடையாளம் காணும் முக்கியப் பொறுப்பு உள்ளது. சாத்தியமான முறைகேடுகளைப் பற்றி உங்களுக்குத் தெரியவந்தால் அல்லது அவை ஏற்பட்டதாக உங்களுக்குக் கவலை இருந்தால் - பொருந்தும் நிதி சார்ந்த கட்டுப்பாட்டின்படி அல்லது நிறுவப்பட்ட செயல்முறை அல்லது நடைமுறைப்படி இல்லாதது என்று உங்களுக்குத் தெரிந்த ஒரு விஷயத்தைச் செய்யக் கேட்டுக்கொள்ளப்படுவது உட்பட - இதை உங்கள் தொழில்வணிகப் பிரிவுக்குள் இருக்கும் தகுந்த நபரிடம் அல்லது அற மற்றும் பின்பற்றல் உதவி எண்ணின் மூலம் உடனே தெரிவிப்பது உங்கள் கடமையாகும்.

### 8.4 அறிவுசார் சொத்து

அறிவுசார் சொத்து என்பது முக்கியமானதொரு நிறுவன சொத்து. இது நமது போட்டி ரீதியான சாதக நிலை, நமது நற்பெயர், நமது பிராண்ட் ஆகியவற்றை நாம் பராமரிக்க உதவுகிறது. இது பாதுகாக்கப்பட வேண்டும். அறிவுசார் சொத்துக்களுக்கான எடுத்துக்காட்டுகளில் பின்வருவனவும் அடங்கும்:

- Gates மற்றும் பிற பிராண்ட் பெயர்கள்;
- அவற்றின் தொடர்புள்ள லோகோக்கள்;
- காப்புரிமைகள்;
- வர்த்தக முத்திரைகள்;
- பதிப்புரிமைகள்;
- தொழில் ரகசியங்கள் உட்பட ரகசியக்காப்புள்ள தகவல்கள்;
- யோசனைகள், கண்டுபிடிப்புகள், தயாரிப்பு உருவாக்கங்கள்;
- உற்பத்தி நிகழ்முறைகள் மற்றும் செய்முறை அறிவு;

- போட்டி ரீதியான பகுப்பாய்வுகள், திட்டங்கள், வியூகங்கள்.

நமது வர்த்தக முத்திரைகளும் லோகோக்களும் நிறுவனக் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளின்படி மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

Gates-இன் அறிவுசார் சொத்துக்களை நீங்கள் எப்போதும் பாதுகாக்க வேண்டும், மற்றவர்களின் அறிவுசார் சொத்துரிமைகளை மீறுவதைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் நிறுவனத்தில் வேலைசெய்யும் காலத்தில் புத்தாக்கங்கள் எவற்றையாவது உருவாக்கினால் அல்லது புதிதாக எவற்றையாவது கண்டுபிடித்தால், அதை உங்கள் மேற்பார்வையாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இத்தகைய புத்தாக்கங்களை அல்லது கண்டுபிடிப்புகளை Gates-க்குச் சொந்தமான, முற்றிலும் ரகசியக்காப்புள்ள அறிவுசார் சொத்தாகக் கருதிக் கையாள வேண்டும். இத்தகைய புத்தாக்கங்களுக்கு அல்லது கண்டுபிடிப்புகளுக்குப் பதிவு செய்தலின் மூலம் அல்லது பொருந்தும் சட்டத்தின் கீழ் ஆவணமாக்குவதன் மூலம் பாதுகாப்பு தேவைப்படலாம்.

Gates-இன் அறிவுசார் சொத்துக்களின் எந்தத் தவறான பயன்பாட்டையும் அல்லது மீறலையும் உங்கள் தொழில்வணிகப் பிரிவுக்குள் இருக்கும் தகுந்த நபரிடம், Gates சட்டத் துறையிடம், அல்லது அற மற்றும் பின்பற்றல் உதவி எண்ணின் மூலம் சொல்லுங்கள்.

## 9. அரசுப் புலனாய்வுகளும் தகவல் வேண்டுகோள்களும்

அரசுப் புலனாய்வாளர்களின் ஒவ்வொரு நியாயமான வேண்டுகோளுக்கும் ஒத்துழைப்பது நமது கொள்கையாகும். எந்த அரசின் அல்லது அரசு முகமையின் பிரதிநிதியும் ஒரு புலனாய்வுக்காக உங்களுடன் ஒரு நேர்காணல் வேண்டும் என்று கோரினால் அல்லது தரவுகளுக்கு அல்லது ஆவணங்களுக்கு அணுகல் கோரினால், நீங்கள் அந்தப் பிரதிநிதியை உடனே உங்கள் மேற்பார்வையாளரிடம் அனுப்ப வேண்டும். மேற்பார்வையாளர் Gates சட்டத் துறையிடம் ஆலோசனை பெற வேண்டும். Gates சட்டத் துறையிடம் ஆலோசனை பெறுவதற்கு முன்பு எந்த சந்தர்ப்பத்திலும் நீங்கள் ஒரு நேர்காணலுக்கு ஒப்புக்கொள்ளவோ எந்த முகமைக்கும் அல்லது தனிநபருக்கும் நிறுவனத் தரவுகளை அல்லது ஆவணங்களைத் தரக் கூடாது. நிலுவையிலுள்ள அல்லது நியாயமான வகையில் சாத்தியமான புலனாய்வு எதனோடும் தொடர்பு இருக்கக்கூடிய காகித மற்றும் மின்னணு ஆவணங்கள், மின்னஞ்சல்கள் ஆகியவை உட்பட எல்லாப் பொருட்களையும் நீங்கள் பேணிக் காக்க வேண்டும்.

## 10. பின்பற்றலும் தெரிவித்தலும்

### 10.1 பின்பற்றல்

இந்த நெறியின் ஏற்பாடுகளை மீறும் எந்த இயக்குநரும் அலுவலரும் அல்லது ஊழியரும் வேலைநீக்கம் வரையிலான மற்றும் வேலைநீக்கம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார். குற்றவியல் சட்டவிதிகளை அல்லது இந்த நெறியின் அடித்தளமாக உள்ள பொருந்தும் சட்டங்களை வேண்டுமென்றே மதிக்காதிருந்தால், நிறுவனம் குற்றவியல் வழக்குத்தொடுப்புக்காக அல்லது குடிமை நடவடிக்கைக்காக இத்தகைய மீறலை தகுந்த ஆணையத்திடம் தெரிவிக்கக்கூடும்.

### 10.2 தெரிவிப்புச் செயல்முறைகளும் பிற விசாரணைகளும்

இந்த நெறியை, இதில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளை அல்லது எந்த பொருந்தும் சட்ட அல்லது ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளையும் மீறுகின்ற நடவடிக்கைகள் நிகழ்ந்திருப்பதாக, நிகழ்ந்துகொண்டிருப்பதாக அல்லது நிகழப்போவதாக நீங்கள் நம்பினால் அல்லது எந்தக் கணக்குப்பதிவு, அக கணக்குப்பதிவுக் கட்டுப்பாடுகள் அல்லது தணிக்கை தொடர்பான விஷயங்கள், அல்லது மேற்கொள்ளப்படக்கூடிய எந்த நடவடிக்கை பற்றியும் உங்களுக்கு வழிகாட்டல் தேவைப்பட்டால், அந்த விஷயத்தை நீங்கள் நிறுவனத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீங்கள் உங்கள் மேலாளரிடம், உங்கள் மேற்பார்வைச் சங்கிலியில் உள்ள இன்னொரு நபரிடம், உங்கள் தகுந்த மனிதவளத் துறைப் பிரதிநிதியிடம் அல்லது Gates சட்டத் துறையிடம் தெரிவிப்பதன் மூலம் நீங்கள் இதைச் செய்யலாம். நிஜமான அல்லது சந்தேகிக்கப்படும் சட்டவிரோத அல்லது அறமற்ற நடத்தை பற்றியும், குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் சிறந்த நடவடிக்கை எது என்பது குறித்து உங்களுக்கு சந்தேகம் ஏற்படும்போதும் மேற்பார்வையாளர்களோடும் மேலாளர்களோடும் பேசும்படி உங்களை ஊக்குவிக்கிறோம். இந்த நெறி, இதில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் அல்லது எந்த பொருந்தும் சட்ட அல்லது ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளும் அல்லது எந்தக் கணக்குப்பதிவு, அக கணக்குப்பதிவுக் கட்டுப்பாடுகள் அல்லது தணிக்கை தொடர்பான விஷயங்கள் ஆகியவை குறித்து சாத்தியமான, நேரடி பின்பற்றாமை குறித்து ஒரு தெரிவிப்பைப் பெறும் எந்த மேற்பார்வையாளரும் மேலாளரும் அல்லது மனிதவளத் துறை உறுப்பினரும், கீழே தரப்பட்டுள்ளபடி அதை நிறுவனத்தின் தணிக்கைக் குழுவிடம் (Audit Committee)/பொது வழக்கறிஞரிடம் (Chief Legal Officer) உடனே தெரிவிக்க வேண்டும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்குக் கூடுதலாக, நீங்கள் எந்த மீறல்களையும், சந்தேகிக்கப்படும் மீறல்களையும் அல்லது கவலைகளையும் பின்வரும் வழிமுறைகளின் மூலம் தொடர்புறுத்தலாம்:

(a) இந்த முகவரிக்குக் கடிதம் எழுதலாம்: Gates Industrial Corporation Ltd., Attn: Audit Committee/ **Chief Legal Officer**, 1144 Fifteenth St., Suite 1400, Denver, Colorado 80202;

(b) இந்த முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்: compliance@gates.com;

(c) உங்கள் மொழிக்கு அல்லது இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு A-வில் தரப்பட்டுள்ள அல்லது gatescorp.ethicspoint.com வலைத்தளத்தில் (இந்தப் பின்னிணைப்பு பொது வழக்கறிஞரால் அல்லது அவரது தேர்வுதாரரால் அவ்வப்போது திருத்தப்படலாம்) காணப்பட்டுள்ள இடத்திற்குப் பொருத்தமான எண்ணை (கட்டணம் அற்றது) அழைப்பதன் மூலம்; அல்லது

(d) gatescorp.ethicspoint.com என்ற வலைத்தளத்தில் Gates-இன் வெளித் தரப்பு வழங்குநிறுவனத்தின் வலைவாசலை அல்லது பொது வழக்கறிஞரால் அல்லது அவரது தேர்வுதாரரால் அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படக்கூடிய எந்த அடுத்துவரும் வெளித் தரப்பு வழங்குநிறுவனத்தின் வலைவாசலையும் அணுகுவதன் மூலம்.

எந்த மீறலையும் அல்லது சாத்தியமான மீறலையும் நீங்களாகப் புலனாய்வு செய்யக் கூடாது. இத்தகைய பணியே நிறுவனத்திற்குள் இருக்கும் பொருத்தமான நபர்களுக்கு விட வேண்டும்.

ஊழியர்கள் எந்த மீறல்களையும் சந்தேகிக்கப்படும் மீறல்களையும் அல்லது கவலைகளையும் வெளிப்படையாக, ரகசியக்காப்புடன் அல்லது அநாமதேயமாகத் தெரிவிக்கலாம்; ஆனால் நிறுவனம் பின்தொடர்வதற்கு வசதியாகப் போதுமான தகவல்களை (எ.கா., சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் நபர்களின் பெயர்கள், தேதிகள், நடவடிக்கையின் தன்மை ஆகியவை) அளிப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். போதுமான ஒரு புலனாய்வை நடத்துவதற்குத் தேவைப்பட்டால் தவிர அல்லது நீதிமன்ற அல்லது பிற சட்டபூர்வ நிகழ்முறையால் கட்டாயப்படுத்தப்பட்டால் தவிர, நிறுவனம் (i) ஒரு தெரிவிப்பைச் செய்து தனது அடையாளம் ரகசியக்காப்புடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் எந்த நபரின் அடையாளத்தையும் வெளிப்படுத்தாது, அல்லது (ii) அநாமதேயமாக ஒரு தெரிவிப்பைச் செய்யும் எந்த நபரின்

அடையாளத்தையும் கண்டறிய முயலாது, அல்லது கண்டறிய வேறு எந்த நபரும் அல்லது குழுவும் மேற்கொள்ளும் எந்த முயற்சியையும் சகித்துக்கொள்ளாது. ஒரு மீறல் நிகழ்ந்ததாகத் தீர்மானிக்கப்பட்டால் தவிரவும் தீர்மானிக்கப்படும் வரையிலும், எந்த நபரைப் பற்றி அல்லது எந்த நபருக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டு எழுப்பப்படுகிறதோ அவரது அடையாளத்தைப் பாதுகாக்கவும் நிறுவனம் நியாயமான அளவு முயற்சிகள் மேற்கொள்ளும். சாத்தியமான தவறான நடத்தை குறித்த எந்தப் புலனாய்விலும், எந்தப் பொறுப்பிலும் ஈடுபட்டுள்ள எந்த நபரும், சட்டப்படி தேவைப்பட்டால் தவிர அல்லது தமக்காகச் சட்ட ஆலோசனையை நாடும்போது தவிர புலனாய்வுக்கு வெளியில் இருக்கும் யாருடனும் எந்தத் தகவல்களைப் பற்றியும் பேசவோ தகவல்களை வெளிப்படுத்தவோ கூடாது; அவர் எந்தப் புலனாய்விலும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்.

ஆர்வமுள்ள வேறு எந்தத் தரப்பும் இந்த நெறிகளைப் பின்பற்றி எந்த மீறல்களையும் சந்தேகிக்கப்படும் மீறல்களையும் அல்லது கவலைகளையும் தெரிவிக்கக்கூடும். இத்தகைய எந்தத் தெரிவிப்பும் செய்யப்படும்போது தெரிவிப்பை சமர்ப்பிக்கும் நபரின் பெயரும் அளிக்கப்பட வேண்டும்.

நிறுவனமும் தணிக்கைக் குழுவும் (Audit Committee) சரி, எந்த இயக்குநரும் அலுவலரும் அல்லது ஊழியரும் சரி, இந்த நெறியைப் பின்பற்றி நல்ல நம்பிக்கையில் எந்த அரசாங்க, ஒழுங்குமுறை சார்ந்த அல்லது சட்ட அமலாக்க அமைப்பும் உட்பட தணிக்கைக் குழுவிடம், மேலாண்மையிடம் அல்லது வேறு எந்த நபரிடமும் அல்லது குழுவிடமும் ஒரு தெரிவிப்பைச் செய்கின்ற அல்லது பிற வகையில் ஒரு தெரிவிப்பைப் புலனாய்வு செய்வதில் உதவுகின்ற எந்த நபரையும் நிறுவனம், தணிக்கைக் குழு, எந்த இயக்குநரும் அல்லது ஊழியரும் நீக்கவோ, பதவியிறக்கவோ, இடைநீக்கவோ, மிரட்டவோ, துன்புறுத்தவோ வேறு எந்த விதத்திலும் பாகுபாட்டுடன் நடத்தவோ நேரடியாக அல்லது மறைமுகமாக பதிலடி கொடுக்கவோ மாட்டார்கள். தெளிவுக்காக, Gates Industrial Corporation Ltd. மற்றும் Gates Industrial Corporation Ltd.-இன் ஒன்றிணைத்த நிதி சார்ந்த அறிக்கைகளில் யாருடைய நிதி சார்ந்த தகவல்கள் சேர்க்கப்படுகின்றனவோ அந்தத் துணைநிறுவனங்கள், கூட்டுநிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இந்தத் தடைகள் பொருந்தும். இருந்தாலும், இந்தத் தெரிவிப்புச் செயல்முறைகளில் எதுவும் வலுவான நம்பிக்கையின்றி அல்லது பொய்யான அல்லது அற்பமான விதத்தில் பயன்படுத்தப்பட்டால் அது இந்த நெறிமுறையின் மீறலாகக் கருதப்படும். தன்னைப் பற்றியே தெரிவிப்பது ஊக்குவிக்கப்படுகிறது. நீங்கள் ஒரு மீறலைத் தெரிவித்தால், அந்த மீறலில் நீங்களும் ஏதோ ஒரு விதத்தில் ஈடுபட்டிருந்தால், எந்த மீறல் தொடர்பாகவும் ஒழுங்கு நடவடிக்கையைப் பரிசீலிக்கும்போது Gates அந்த சுயதெரிவிப்பைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்.

## 11. ஒப்புதல்கள் மற்றும் தள்ளுபடிகள்; திருத்தம்; பொருளாக்கம்

இந்த நெறியின் குறிப்பிட்ட சில ஏற்பாடுகள், தகுந்த நபரிடமிருந்து முன்கூட்டியே ஒப்புதல் பெறப்பட்டால் தவிர நீங்கள் செயல்பட வேண்டும் அல்லது செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று விதிக்கின்றன. இந்த நெறியின்படி ஒப்புதல் கோரும் நிர்வாக அலுவலர்கள் போகப் பிற ஊழியர்கள் அத்தகைய ஒப்புதலைப் பொது வழக்கறிஞரிடம் கோர வேண்டும். நிர்வாக அலுவலர்கள் மற்றும் இயக்குநர்கள் தொடர்பான ஒப்புதல்கள் போர்டிடமிருந்து அல்லது அதன் குழு ஒன்றிடமிருந்து பெறப்பட வேண்டும்.

இந்த நெறியின் பிற ஏற்பாடுகள், நீங்கள் குறிப்பிட்ட விதத்தில் செயல்பட வேண்டும் அல்லது செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் ஒப்புதல் பெறுவதன் அடிப்படையில் விதிவிலக்குகளை அனுமதிக்கக் கூடாது என்றும் விதிக்கின்றன. நிர்வாக அலுவலர்கள் மற்றும் இயக்குநர்கள் தொடர்பான அந்த ஏற்பாடுகளின் தள்ளுபடியை போர்டு அல்லது அதனுடைய ஒரு குழு மட்டுமே வழங்கலாம். ஒரு நிர்வாக அலுவலருக்கு அல்லது இயக்குநருக்கு இந்த நெறியின் கீழ் வழங்கப்படும் எந்தத் தள்ளுபடியும், பொருந்தும் கடன்பத்திரச் சட்டங்கள் மற்றும்/அல்லது பங்குச் சந்தை விதிகளின்படி உரிய நேரத்தில் வெளிப்படுத்தப்படும்.

பொது வழக்கறிஞர் அல்லது அவரது தேர்வுதாரர் இந்த நெறியில் நேரடியல்லாத மாற்றங்களைச் செய்யக்கூடும். இந்த நெறியில் பிற மாற்றங்கள் அனைத்தையும் போர்டு மட்டுமே செய்யலாம். அவை பொருந்தும் சட்டங்களின் கீழ் வெளிப்படுத்தப்படும்.

சில சூழ்நிலைகளில், நெறியின் ஒரு ஏற்பாடு குறிப்பிட்ட ஒரு நடத்தைக்கு உரியதா என்று தெளிவாகத் தெரியாமல் போகலாம். இத்தகைய சூழ்நிலைகளில், நெறியைப் பொருளாக்கம் செய்வதற்கும், தேவைப்படும்போது, பொருளாக்கத்திற்காக விஷயங்களை போர்டிடம் அல்லது அதனுடைய ஒரு குழுவிடம் அனுப்புவதற்கும் பொது வழக்கறிஞருக்கு முழு அதிகாரம் உள்ளது. நெறி ஒரு குறிப்பிட்ட நடத்தைக்குப் பொருந்தாது என்று போர்டு அல்லது அதனுடைய குழு தீர்மானித்தால் அது நெறியின் தேவைப்பாடுகளைத் தள்ளுபடி செய்வதாகக் கருதப்படக் கூடாது.

## பின்னிணைப்பு A – நாடுவாரியாக Gates அற மற்றும் பின்பற்றல் உதவி எண்கள் (Ethics and Compliance Hotline Numbers)

| நாடு | மொழி | எண்(கள்) கமாவால் பிரிக்கப்பட்ட பல எண்கள் |
|---|---|---|
| அர்ஜென்டீனா | ஸ்பானிஷ்/ஆங்கிலம் | 0800-345-0408 |
| ஆஸ்திரேலியா | ஆங்கிலம் | 1800251547 |
| பஹ்ரெய்ன் | அரபு/ஆங்கிலம் | 80006926 |
| பெல்ஜியம் | டச்சு/ஆங்கிலம் | 0800 78 525 |
| பிரேசில் | போர்ச்சுகீஸ்/ஆங்கிலம் | 0212 038 3751 |
| கனடா | ஆங்கிலம் | 1-833-724-7807 |
| சீனா | மாண்டரின்/ஆங்கிலம் | 4001200349 |
| ஷெக் குடியரசு | ஷெக்/ஆங்கிலம் | 800100204 |
| பிரான்ஸ் | பிரெஞ்சு/ஆங்கிலம் | 0801 13 01 24 |
| ஜெர்மனி | ஜெர்மன்/ஆங்கிலம் | 0800 180 8911 |
| இந்தியா | தமிழ்/இந்தி/ஆங்கிலம் | 00080008 20172 |
| இந்தோனேசியா | ஆங்கிலம் | 021 30909515 |
| இத்தாலி | இத்தாலிய மொழி/ஆங்கிலம் | 800 140 841 |
| ஜப்பான் | ஜப்பானிய மொழி/ஆங்கிலம் | 0800 123 9233 |
| தென்கொரியா | கொரிய மொழி/ஆங்கிலம் | 00744055 |
| லக்சம்பர்க் | ஆங்கிலம் | 800 23 813 |
| மலேசியா | மலாய்/ஆங்கிலம் | 1800-81-1378 |
| மெக்சிகோ | ஸ்பானிஷ்/ஆங்கிலம் | 8008801490 |
| ஓமன் | அரபு/ஆங்கிலம் | *No telephone number available. Please use Click Connect via gatescorp.ethicspoint.com.* |
| போலந்து | போலிஷ்/ஆங்கிலம் | 800 005 788 |
| ரஷ்யா | ரஷ்ய மொழி/ஆங்கிலம் | *No telephone number available. Please use other reporting options.* |
| சவூதி அரேபியா | அரபு/ஆங்கிலம் | 8001111851 |
| சிங்கப்பூர் | ஆங்கிலம் | 800 492 3134 |
| ஸ்பெயின் | ஸ்பானிஷ்/ஆங்கிலம் | 900752571 |
| தைவான் | மாண்டரின்/ஆங்கிலம் | 00801-49-2300 |
| தாய்லாந்து | தாய்/ஆங்கிலம் | 1800 018 431 |
| துருக்கி | துருக்கிய | 0008004920004 |

| | | |
|---|---|---|
| | மொழி/ஆங்கிலம் | |
| ஐக்கிய அரபு அமீரகம் | அரபு/ஆங்கிலம் | 8000120624 |
| யுனைட்டட் கிங்டம் | ஆங்கிலம் | 0808 238 7509 |
| அமெரிக்கா | ஆங்கிலம் | 1-844-490-5805 |